1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

78-ம் புத்தகம் 13-ம் இல. யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு சித்திரைமாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## மேய்ப்பர் பணியும் மேற்றிராணிமாரும்

மரணப்படுக்கையில் அவஸ்தைப்படும்தந்தை தன் மக்களது வருங்காலகதியை நினைத்து அங்கலாய்ப்பதைத் துயரத்துடன் பார்த்திருக்கிறோம். யேசுநாதசுவாமி கடைசி இராப்போசன சாலையில் செய்தசெபத்தை வாசிக்கும்போது இந்தக்காட்சிதான் நம்மனதிற்கு வருகிறது. அச்சமயத்தில் அவருக்கிருந்த ஆறாத்துயரமும், தாங்கொணாக் கவலையும் அவருடைய செபத்தில் அப்படியே கொட்டிவைத்திருப்பதுபோல், வாசிப்போர் உள்ளத்தைக் கலங்கச்செய்கின்றன. அப்பொழுது அவருக்கிருந்தகவலையில்எல்லாம் பெரிய கவலை தமது அப்போஸ்தலர்களைப் பற்றித்தான். இதுவரை தமது அருமந்த மைந்தரைப்போல் அவர்களைப் பாராட்டினார்; தெய்வீக ஞானஅமுது அவர்களுக்கு ஊட்டினார்; கண்ணின்கருவிழியென அவர்களைக் காப்பாற்றினார். இப்பொழுது அவர்களைவிட்டுப் பிரியவேண்டியகாலம் வந்துவிட்டது. இனி அவர்களை ஆதரித்துக் காப்பாற்றவேண்டியவர் அவரது நித்தியபிதாதான். "பிதாவே, இதுவரை நான் காப்பாற்றினேன்; இனித் தேவரீர்தாம் அவர்களுக்குத்துணை; தின்மை அவர்களைத் தீண்டாது தற்காத்தருளும்" என வேண்டிக் கொண்டார்.

### யேசுவுக்கு உகந்தசெபம்

தமது அப்போஸ்தலர்களுக்காக நெஞ்சுஉருகி, நித்தியபிதாவைக் கெஞ்சி மன்றாடினயேசு, அப்போஸ்தலர் ஸ்தானத்திலிருந்து தமது திருச்சபையை நடத்திவரும் மேற்றிராணிமாரைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பாரா? "நமக்காக எப்பொழுதும் யேசு மனுப்பேசுகிறார்" என்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறார். அந்த இடையறாத செபத்தில் தமதுமேற்றிராணிமாரை அவர் மறந்து விடுவாரா? அப்போஸ்தர்களுக்கு இருந்ததுபோல் இக்காலத்தில் அப்போஸ்தலர்களாய்விளங்கும் மேற்றிராணிமாருக்குக் கஷ்டம் கவலை இல்லையா? வேதனை வருத்தம் இல்லையா? சொல்லவேண்டுமானால், யேசுநாதர் அவர்களைப் பற்றிக் கவலைகொள்ள அதிக காரணம் உண்டு. யேசுவுக்கு உகந்தவர்களாய் மேய்ப்பர்பணி ஆற்றி, யேசுவின் மந்தைக்குத் தந்தையராய் விளங்கி, அருஞ்சேவை செய்யும் மேற்றிராணிமாருக்காகச் செய்யும் உருக்கமானசெபம், யேசுவுக்கு உகந்த செபம் என்பதற்குச்சற்றும் சந்தேகமில்லை.

### ஞானச்சரீரத்தின் மேன்மைதங்கிய அங்கம்

திருச்சபையின் அமைப்பை நாம் ஆராய்ந்து பார்க்குமளவில் மேற்றிராணிமாரின் அருமையும் பெருமையும் நமக்குப் புலனாகும். பரிசுத்த பாப்பரசர் பன்னிரண்டாம் பத்திநாதர் திருச்சபை, யேசுவின் ஞானச்சரீரம் என்பதைப்பற்றி எழுதியுள்ள சுற்றுநிருபம் இந்த உண்மையைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. திருச்சபை என்னும் ஞானச்சரீரத்துக்கு யேசுதான் சிரசு. மற்றக் கிறீஸ்தவர்கள் சாதாரண அங்கம். மேற்றிராணிமாரோ, சிரசாகிய யேசுவோடு விசேஷவகையில்

— J. தனசாமி, S. J. —

இணைக்கப்பட்டிருப்பதால் அங்கங்களில் மேன்மைதங்கிய அங்கம்என்று பாப்பானவர் கூறுகிறார். மேற்றிராணிமாருக்கு இருக்கும் செல்வாக்கையும், சிறந்த மாட்சியையும் விளக்கமாக அவர் விவரித்திருக்கிறார். எப்படி அர்ச். பாப்பானவர் திருச்சபை முழுவதற்கும் தலைமைதாங்குகிறாரோ, அப்படியே ஒவ்வொரு மேற்றிராசனத்துக்கும் அதிபதியான மேற்றிராணியார், பாப்பானவரின் அதிகாரத்திற்கு அடங்கினவராய் இருந்தபோதிலும், யேசுவின் நாமத்தால் தமது கண்காணிப்பில்உள்ள விசுவாசிகளை ஆண்டு நடத்திவருகிறார். அதனால் கிறீஸ்துவினாலேயே ஏற்படுத்தப்பட்ட அதிகாரியென அனைவரும் அவரை அங்கீகரித்து அவருக்கு அமைந்து நடக்கவேண்டும்.

### கிறீஸ்தவர்களுக்குரிய முக்கியபுண்ணியம்

மேற்றிராணிமாருக்குக் கீழ்ப் படிந்துநடப்பது கிறீஸ்தவசீவிய

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## அந்தோனிக்குட்டி அண்ணாவியார்

கிறிஸ்தவ அறிஞர்களால் தமிழுக்குண்டான நலன்களை விளக்கும் நோக்கமாக எழுதப்பெற்றநூல் "கிறிஸ்தவமும் தமிழும்" என்பதாகும். இதனை இயற்றியவர் மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள். இந்நூல் அயல்நாட்டவரும், நம்நாட்டவருமான கிறிஸ்தவத் தமிழ்ப்பெரியார் தமிழ்மொழி, இலக்கிய, இலக்கணத்துறையில் செய்த பங்குபணியை உணர்த்துகின்றது. இந்நூலில் தமிழ்ப்புலமை வாய்ந்த சுதேசிக கிறிஸ்துவர்கள் என்றஅதிகாரத்தில் முதல் இடம்பெறுபவர் அந்தோனிக்குட்டி அண்ணாவியார்.

அண்ணாவியாரைப்பற்றித் திரு. வேங்கடசாமி அவர்கள் குறிப்பது வருமாறு:— "திருநெல்வேலி ஜில்லா மணப்பாறையில் பிறந்தவர். பேர்பெற்ற வீரமாமுனிவர் காலத்திலிருந்தவர். சிறந்த தமிழ்ப்புலவர். இவர் யேசுநாதர்மீது பலபாடல்களைப் பாடியிருக்கிறார். இப்பாடல்கள் அனைத்தும் ஒன்றுதிரட்டி யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன."

ஆசிரியர் வேங்கடசாமிஅவர்கள் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மணப்பாட்டை மணப்பாறைஎன்று மாறுபடக்கூறுகின்றார் என்று எண்ண இடமுண்டு. கர்ணபரம்பரையாக ஒரு கதையுண்டு. அக்கதையை நம்பினால் மணப்பாட்டையும் அண்ணாவியாரின் பிறப்பிடமாகக்கொள்வதற்கில்லை. தூத்துக்குடிக்குத்தான் அந்த அதிர்ஷ்டம் அடிக்கிறது.

வீரமாமுனிவர் புலமையை அண்ணாவியார் கேள்வியுற்று அவரை நேரில்கண்டு அளவளாவ ஆசைகொண்டிருந்தார். அவ்வாறே முனிவரும் அண்ணாவியாரைக் கண்டுபேசக் காத்திருந்தார். ஆனால், அவர்களுக்கு அவ்வாய்ப்பு வெகுகாலமாகக் கிட்டவில்லை. ஒருநாள் வீரமாமுனிவர் மணப்பாட்டிலிருப்பதாகக் கேள்விப்பட்டு அண்ணாவியார் அவரைப்பார்க்கச்சென்றார்.

"நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்?"

"நான் அந்தோனிக்குட்டி அண்ணாவி. தூத்துக்குடியிலிருந்து வருகிறேன். தங்களைத் தரிசிக்கும்பேறு இன்றுகிட்டியது."

உள்ளம்தூயார் பொருந்துவர் எதிர்ந்தஞான்றே என்பதற்கேற்ப இருபெரும் புலவரும் மனங்கலந்து உரையாடினர்.

'நீர்பாடிய பாடலைப்பார்ப்போம்' என்றார் முனிவர். அண்ணாவியார் 'பேரின்பக்காதலை' எடுத்தார். முனிவர்பாடினார். மகிழ்ந்தார். இளநகை காட்டி 'என்னுடையபாக்களைக் கண்டதுண்டோ? என்று வினவியவண்ணமே தேம்பாவணியைநீட்டினார். அண்ணாவியார் அதைவாங்கிப்படித்து அடிகளாரின் கவித்திறமையைப் பெரிதும்பாராட்டினார்.

'உமதுபாடல் செப்புக்காசு. எனதுபாடல் தங்கநாணயம் அறிந்தீரோ'?.

"அறிந்தேன் சுவாமி!"

"எதை அறிந்தீர்?"

ரம்போலா மாஸ்கரேனஸ்

'செப்புக்காசைச் சிறுவர்களும் பெரியவர்களும் மாற்றுவதற்கு எளிதாக இருக்கும். அதைப்போலப் பேரின்பக்காதலைச் சிறுவர்களும் பெரியவர்களும்கற்று அதன் பொருளைச் சுலபமாக அறிந்துகொள்ளக்கூடும். பெரியவர்களே தங்கநாணயத்தை மாற்றத் தகுந்தவர்கள். அதைப்போன்று தேம்பாவணியின் நுண்பொருளை அறிதற்கு முதிர்ந்த புலமையுடைய பெரியவர்களே தகுந்தவர்கள்.'

இது கதை. நிகழ்ந்ததாக இருக்கலாம். நிகழாததாக இருக்கலாம். கதைக்குக் கண் மூக்கில்லை என்பார்கள். ஆனால், குற்றமற்ற எக்கதையிலும் கருத்தில்லாமல் போவதில்லை.

அண்ணாவியாரின் பாடல்களைச் சிறியவர்களும் படித்து அனுபவிக்கலாம். பெரியவர்களும் தேர்ந்துபோற்றலாம். ஒருசிறிது கற்றவர்களும் படித்துப் புரிந்துகொள்ளலாம். ஆழ்ந்தபுலமையாளரும் பாநலத்தில்தோய்ந்து சுவைநலம்பெறலாம். ஒருசிலபாக்கள் இருதிறத்தாருக்கும் இன்சுவைதரும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# சுதேச வர்த்தமானம்

## மந்திரியாரின் பேராவல்

சமீபத்திலே போக்குவரத்துமந்திரியாரான சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் பொத்துவிலுக்கு விஜயஞ்செய்திருந்தார். அங்கே பரிமளிப்பான ஓர் வரவேற்பு உபசாரம் அவருக்கு அளிக்கப்படலாயிற்று. அத்தருணம் அவர் பேசியவிடத்து: "இந்தப்பகுதியில் ஒரேயொரு கம்யூனிஸ்தன் தானும் கிடையாதென்று பொத்துவில் எம். பி. அவர்கள்மூலம் கேள்விப்படுவது ஒருவருக்கு மிகப்பெரும் சந்தோஷம் அளிப்பதாகின்றது; நான் மரிக்குமுன் இந்தநாட்டில் எங்காவது கம்யூனிஸ்தர்கள் இல்லாதொழிந்து போகவேண்டுமென்பதே எனது பேராவலாகும்; இலங்கை அரசாங்கம் மக்களின் அரசாங்கம்; சிங்களர், தமிழர், முஸ்லீம்கள் என்றசாதிபேதமில்லாது, பௌத்தர், இந்துக்கள், கிறீஸ்தவர்கள், இஸ்லாம்களென்ற சமயபேதமில்லாது சகலரும் அதேசமத்துவமான உரிமைகளைக் கொண்டிருக்கின்றார்கள்; ஒவ்வோர்பிள்ளையிலும் இந்த எண்ணம் பதிக்கப்படவேண்டு"மெனக் கூறலாயினர்.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

எட்டாவதாக—மன்னார்க் கொலைவழக்கு விசாரணைக்கு எடுக்கப்படலாயிற்று. இதிலே வேலு துரைசாமி என்பவன் 18 வயதுடைய மரியாயி எனும் ஓர் இளம்பெண்ணைச் சென்றவருடம் பங்குனிமாதம் 23-ந்திகதியன்று ஓர் துப்பாக்கிகொண்டு சுட்டுக் கொலைசெய்தானென்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தான். கொலையுண்ட பெண்பிள்ளைக்கு விவாகம் ஒழுங்காகி இன்னும் ஓர் மாதத்தில் அது நடைபெறவிருக்கும் வேளையிலே இந்தக் கொலைச்சம்பவம் நடைபெறலாயிற்று. விசாரணைமுடிவில் எதிரி கொலைக்குற்றவாளியாகக் காணப்பெற்று மரணதண்டனை விதிக்கப்பட்டனன்.

ஒன்பதாவதாய்—கோண்டாவில் வாசிகளான வயித்தி ஐயாத்துரை, சரவணை செல்லையா எனும் இருவர் சேர்ந்து எம். கனகலிங்கம் என்பவரைக் கொலைசெய்ய எத்தனித்தார்களெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கு விசாரணைக்குவந்து, முடிவில் முதலாம்எதிரி கடுங்காயம் உண்டுபண்ணியதில் குற்றவாளியாகி மூன்றுவருடக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட, இரண்டாம்எதிரி சுத்தவாளியாகி விடுதலையடைந்தனன்.

## சதாசிவம் கொலைவழக்கு

அகில-இலங்கைப் பிரபலகிறிக்கெற் விளையாட்டுக்காரரான திரு. எம், சதாசிவம் என்பார் தனதுமனைவியாரைக் கொலைசெய்தாரெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டுள்ளவழக்கு சென்றபங்குனிமாதம் 20-ந்திகதிமுதல் கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே சங். கிறேஷன் நீதியரசராலும், ஆங்கிலபாஷை பேசும் விசேஷயூரியாராலும் விசாரணைசெய்யப்பட்டுவருகிறது. அரசினர் பக்கமாகச் சொலிசிற்றர்-ஜெனறல் திரு. ரி. எஸ். பெர்னாண்டோஅவர்கள் கள் ஏற்பட்டு விசாரணையைத் தொடக்கினர். காலஞ்சென்ற ஸ்ரீமதி சதாசிவத்தின் ஆயாவாகிய 76 வயசுடைய பொடிஹாமி எனும்பாட்டி சாட்சியமளிக்கையில், தனது எசமாட்டியின் உயிர்நீத்தஉடலைக்கண்டவகையை விபரித்துக் கூறியபோது கண்ணீர்பெருக அழுதுநின்றாள். இவள் சதாசிவம் குடும்பத்திற்குக் கடந்த 44 வருடகாலமாகப் பணியாற்றிவந்திருக்கின்றாள். அடுத்தபடியாக வேலைக்காரனை வில்லியம் விசாரணைசெய்யப்பட்டுக் கொலைநிகழ்ந்தவிதத்தை எடுத்துக்கூறியிருக்கின்றான்.

## மாகாணங்களும் சனத்தொகையும்

சென்றபங்குனிமாதம் 20-ந்திகதியன்று எடுக்கப்பட்ட சனக்கணக்கின்படி இலங்கையிலுள்ள ஒன்பதுமாகாணங்களினதும் சனத்தொகை வருமாறு:

| | | |
|---|---|---|
| மேல் மாகாணம் | — | 22,31,189 |
| மத்திய ,, | — | 13,68,409 |
| தென் ,, | — | 11,32,956 |
| வட ,, | — | 5,71,306 |
| கிழ் ,, | — | 3,55,021 |
| வடமத்தி ,, | — | 2,28,759 |
| ஊவா ,, | — | 4,65,337 |
| சப்பிரகாமுவ ,, | — | 8,93,608 |
| முழுக்குடிசனத் தொகை | — | 81,03,648 |

## நகர்களும் சனத்தொகையும்

சென்றபங்குனிமாதம் 20-ந்திகதியன்று எடுக்கப்பட்ட சனக்கணக்கின்படி, இலங்கையிலே முனிசிப்பாலிற்றி எனப்படும் நகரசபைகள் அமைந்துள்ள நகரங்களின் சனத்தொகைவருமாறு:

| | | |
|---|---|---|
| கொழும்பு | — | 4,24,816 |
| கண்டி | — | 57,013 |
| காலி | — | 55,825 |
| நீர்கொழும்பு | — | 38,739 |
| நுவரெலி | — | 11,983 |
| யாழ்ப்பாணம் | — | 76,664 |
| குருநாகல் | — | 18,557 |

## பாராளுமன்ற திறப்புவைபவம்

இலங்கைப்பாராளுமன்றத்தின் அதிகாரபூர்வமான திறப்புவைபவம் வருடந்தோறும் வழமையிலே ஆனிமாதத்தில் நடைபெறுவதாகும். ஆனால், இவ்வருடத்திலே வருகிறஆனிமாதத்தில் எலிசபேத் மகாராணியாரின் முடிசூட்டுவிழாவை முன்னிட்டு ஆடிமாதத்துக்குப் பின்போடப்பட்டிருக்கிறது. இந்தத்திறப்புவைபவம் ஆடிமாதம் 7-ந்திகதி நடைபெறுமெனத் தற்போது குறிக்கப்பட்டிருக்கிறது. சென்றவருடம் ஆனிமாதம் 9-ந்திகதியன்று இது நடைபெறலாயிற்று. பாராளுமன்ற விடுமுறை இம்மாதம் 29-ந் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. மறுபடி அது வருகிறஆடிமாதம் 7-ந் திகதியே கூடும்.

## மந்திரியாரின் முன்மாதிரிகை

அம்பலாங்கொடையிலிருந்து சுமார் 18 மைல் தூரத்திலுள்ள பிற்றிகலைக் கிராமத்தைச்சேர்ந்த இன்டிருப்பெலை எனுமிடத்தில் சென்ற 28-ந்திகதி நடைபெற்ற நெல்நாற்றுநடுகை வைபவம்ஒன்றை ஆரம்பித்துவிடுமாறு உணவு – கமத்தொழில் மந்திரியாரான சேர் ஒலிவர் குணதிலகஅவர்கள் தமது அரையில் ஓர் சாறத்தையும் கட்டிக்கொண்டு ஓர் நெல்வயலுள் கால்வைத்து, முழங்கால்அளவு சேற்றுள் சென்று எல்லோருக்கும் ஓர் நல்ல முன்மாதிரிகை காண்பிக்கலாயினர்.

## ஆசிரியர்களின் கடமை

விஜயசமாஜயவின் வருடாந்தகூட்டம் சமீபத்திலே இராஜகிரியாவில் நடைபெறலாயிற்று. அதற்கு நீதிமந்திரியார் சேர் லலிதா இராஜபக்ஷ அவர்கள்தலைமை வகித்துப்பேசியபோது: "எல்லோரும் அரசாங்கசேவையில் வேலைகள்தேடப்படாது; மாணவர்கள் தங்கள் தொழில்முயற்சிகளாக வியாபாரத்தையும், விவசாயத்தையும் மேற்கொள்ளுமாறு அவர்களைத் தூண்டி ஊக்கப்படுத்திவிடுவது ஆசிரியர்களின் கடமையாகும்" எனக்கூறலாயினர்.

## தபாற்கந்தோர் விடுமுறை

சிங்கள, தமிழ்வருடப்பிறப்பை முன்னிட்டு இம்மாதம் 13-ந்திகதியும், 14-ந்திகதியும் தபாற்கந்தோர் விடுமுறை நாட்களாகும். இவ்விருதினங்களிலும் எல்லாத்தபாற்கந்தோர்களிலும் ஒரேயொருமுறைதான் சாதாரணதபால்கள் கொடுக்கப்படும். இருதினங்களிலும் தந்திஅலுவல்கள் ஞாயிற்றுக்கிழமையிற்போல நடைபெறும்.

# "எனக்கு மகள் இல்லை"

இரண்டில்ஒன்று. இப்போதே தெரிந்துகொள். ஒன்றில், இந்தப் பைத்திய எண்ணத்தை விட்டுவிடு. அன்றேல், என் வீட்டை விட்டு வெளியேபோய்விடு. என்றோ உனக்கு ஒரு தந்தை இருந்தார்என்பதை இன்றே மறந்துவிடு. எனக்கும் ஒரு மகன் இருந்தான்என்பதை நானும் மறந்துவிடுகிறேன்.

"தந்தாய்! உங்களுக்கு விசனம் உண்டுபண்ணுவது எவ்வளவு தூரம் என்னைத் துயருக்குள்ளாக்குகிறதுஎன்பதைக் கடவுள்ஒருவரே அறிவார். ஆனால், அவர் என்னைத் தமது சேவைக்கு அழைக்கிறார். நான அவருக்குக் கீழ்ப்படிய வேண்டியதுதான்."

"அப்படியா? சரி, போய்விடு. இனி என்வீட்டு வாசலில்தானும் கால் வையாதே. இனிமேல் நீ எனக்குச் செத்தவனே. என் இருதயத்திலிருந்து உன்நினைவையே எடுத்துவிடுகிறேன். ஆனால், ஒருகுருவாகப்போகவேண்டும் என்கிறநீ ஓர்கிறீஸ்தவன் அல்லவே. அப்போது எவ்வாறுநீ குருவாகமுடியும்? நீ ஒருபோதும் ஞானஸ்நானம்பெறவில்லையே. உனக்கு ஞானஸ்நானம் கொடாமல் நான் பார்த்துக்கொண்டேனே!"

அப்பா, நீங்கள்எனக்கு ஞானஸ்நானம் கொடுப்பிக்கவில்லை. உண்மைதான். ஆனால், முதலாவது உலகயுத்தத்திலே அகழ்களில்வசிக்கும்போது நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன். யுத்தமுன்னணியிலே சாவுக்கு முன் நிற்கையில் தனதுஆத்துமத்தை நித்தியத்துக்கும்சேதமாக்க ஒருவனும் விரும்பமாட்டான் அல்லவா?"

"போ, இந்தக்கதையை நீ என்னிடம் சொல்லவிடாது உன்மேல் ஆயிரம் குண்டுகள்விழுந்து நீ பொடியாகியிருந்தால் நலமாய்இருந்திருக்கும். இனிமேல்ஒருபோதும் உனது முகத்தில் விழிக்கவேமாட்டேன், எப்போதாவது உன்னைப்பார்க்க நேர்ந்தால், ஓர் அந்நியனையேபார்ப்பேன். போய்த்தொலை, சீக்கிரம்."

வாலிபர் தலைகுனிந்து தன் தந்தையை வணங்கினார். உட்கார்ந்திருந்த அவரை நெடுநேரம்நோக்கினார். அவரோ சிலைபோன்று அசையாமல்இருந்தார். வாலிபனோ உயர்ந்துவளர்ந்தவர். அழகானவர். யாரும் அவரைப்பற்றிப் பெருமை கொள்வர். யுத்தத்திலும் அநேகபரிசில்கள் பெற்றவர். இப்பொழுது தன் தந்தையால் தள்ளுண்டு வீட்டை விட்டு வெளியேறுகின்றார். உட்கார்ந்திருந்தமனிதர்அசையவில்லை. கண்களைத்தானும் ஏறெடுத்துப்பார்க்கவில்லை. வாலிபர் வெளியேறிவிட்டார் என்றுகாட்டக் கதவுசாத்தினசப்தம் கேட்டபின்னர்தான் தலையைஉயர்த்தினார். அவர்முகம் இறந்தஒருவரின் முகத்தைப்போல் வெளுத்திருந்தது. கோபத்தினால் கையை இறுகப் பிடித்திருந்தார்.

தனதுமகன் குருவாகவர ஆசிப்பதையிட்டு இவ்விதம் பிசாசுபோல் கோபங்கொண்ட இம்மனிதர்யார்? மேற்குத்தீவுகளில்இருந்த தனதுகிராமக்கோவிலில் தன்னுடைய சிறுவயதில் ஒவ்வொருநாளும் திவ்வியபூசைக்கு உதவிசெய்தவர். படிப்பைமுடித்ததும் பண ஆசை இவரை ஆட்கொண்டது. பணம்திரட்டும்படி ஏராளமானமக்கள் தூரத்திலிருந்த அமெரிக்காவைநோக்கிச் சென்றார்கள். இவரும் தனது நாட்டைவிட்டு அங்குசென்றார். தன் கனவிலும்கருதாத அத்தனைபெருஞ் செல்வம் இவருக்குக் கிட்டியது. ஆனால், பணந்தேடப்போய் இவர் தனது வேதவிசுவாசத்தை இழந்துபோனார். வேதவிசுவாசத்திற்குப் பதிலாக இவர்ஆத்துமத்தினுள் பணஆசையும், பணம்கொண்டுவரும் அதிகாரமோகமுமாகிய பிசாசுகள் நுழைந்துகொண்டன.

இவர் ஓர்கோடீஸ்வரர். தனது மேசையிலிருந்த பொத்தானை இவர் அழுத்தினாலேபோதும்; உலகிலுள்ள தங்கம்வெள்ளி ஆகியவற்றின்விலை பாதிக்கப்படுமாம். அத்தனைபணம் இவரிடம் குவிந்துவிட்டது. வேதபுத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் முட்டாளைப்போல இவரும் பணம்வந்ததும் கடவுள்இல்லைஎன்றார். தனது ஒரேமகனை, மூத்தகுமாரனை மிகப்பெரும் குற்றவாளிபோற்கருதிப் புறக்கணித்தார். எதற்காகப் புறக்கணித்தார்? ஏனெனில், தகப்பன்இழந்ததை—அதாவது கடவுளையும், கத்தோலிக்க திருமறையையும் — மகன்கண்டடைந்துவிட்டான். தன் தகப்பன் விசுவசியாத கடவுளைச்சேவிக்கத் தீர்மானித்ததுதான் அவன்செய்தகுற்றம்.

பலஆண்டுகள்கடந்தன. புறக்கணிக்கப்பட்டமகன் ஒருபோதும் உலகில் பிறக்காதவன்போல் மறைந்தான். தகப்பனானபணக்காரன் தன்மகனைப்பற்றி நினைக்கவேஇல்லை. யாரும் அவனைப்பற்றிப் பேசவேகூடாது. பேசினாலோ குடிகெட்டகாரியம்! அங்ஙனமாக ஒருநாள் கடிதம்ஒன்று வந்தது. "அப்பா"என்று அக்கடிதம் தொடக்கப்பட்டிருந்தது. "இந்தப்பேரால் உங்களை அழைக்க எனக்கு அனுமதி கொடுங்கள். உங்களுக்கு ஒருமகன் இருந்தானென்பதை நீங்கள் மறந்துபோனாலும், எனக்கு ஒருதந்தை இருக்கிறார்என்பதை நான் மறக்கவில்லை. நாங்கள் பிரிந்தநாள்முதல் நான் உங்களைப்பற்றி விடாதுநினைத்து, உங்களுக்காகக் கடவுளைப்பிரார்த்தித்து வந்திருக்கிறேன். நாளை நான் பீடத்திலேறுவேன். ஆராதனைக்குரிய திவ்வியபூசைப்பலியை முதன்முறையாக நான்ஒப்புக்கொடுக்கையில் உங்கள்நினைவாய்த்தான் இருப்பேன். கடவுளின் இரக்கமும், ஆசீர்வாதமும் உங்கள் மேல்இறங்கும்படி அவரைப் பிரார்த்திப்பேன். "மகனே, உன்னை மன்னித்துவிட்டேன்"என ஒருவரியாவது தயவுசெய்து எழுதிஅனுப்புங்கள்.

இந்தக்கடிதம் புறப்பட்ட இடத்தையே மறுநாள் போய்ச்சேர்ந்தது. "இதில் ஏதோதவறு நேர்ந்திருக்கிறதென நினைக்கிறேன்; இந்தக்கடிதம் எனக்கல்ல; எனக்கு மகன்கிடையாது; ஒருபோதும் இருந்ததில்லை; இப்படிக்கு......"என அதில் எழுதியிருந்தது

இந்தக் கோடீஸ்வரனுக்கு இன்னொருபிள்ளை, அதாவது ஓர் மகள் இருந்தாள். அவள்பெயர் எல்லா. மகன் இருக்குமட்டும் அவருடைய அன்பும்ஆசையும்எல்லாம் அவன்மேல்தான். மகளைச் சட்டைபண்ணவில்லை. அவர்மனைவியும் கணவனைப்போல் பணஆசைபிடித்தவள். வேதவிசுவாசமற்றவள். பணத்தையும், பதவியையும் கடவுளாக ஆராதித்தாள்.

அபூர்வஅழகு வாய்ந்தவள் எல்லா. அறிவிலும்சிறந்தவள். அண்ணன் மறைந்தபின் அவள் தன் தந்தையின் உள்ளத்தில் இடம்பெற்றாள். அங்கு அண்ணன் அரசுபுரியும்வரை தகப்பனின் உள்ளத்திலே வேறெவர்க்கும் இடம்கிடைக்கவில்லை. அண்ணன் மறைந்த சிலமாதங்களுக்குப்பின் தகப்பன் தன் அன்பையும், ஆசையையும் மகள்மேல்வைத்தார்.

அவளதுகல்விக்காகப் பணத்தைப் பணமென்றுபாராமல் செலவழித்தார். நாட்டிலேயே மிகச்சிறந்தஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். எல்லாப்படிப்பும் அவளுக்கு ஊட்டப்பட்டது. ஆனால் கடவுள், அவர்தந்தவேதம் ஆகியஇவ்விரண்டையும்பற்றி மாத்திரமே அவளுக்குக் கற்பிக்கப்படவில்லை.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# கத்தோலிக்க சமாச்சாரம்

### எல்லோரும் கத்தோலிக்கரே

பிரான்சுக்கும், ஸ்பெயினுக்குமிடையே பிறெனீஸ்மலைமேல் அமைந்துள்ள அன்டோரு எனும் சிறியநாடுதான் உலகிலுள்ள மற்றெந்தநாட்டிலும் பார்க்க மிகவுங்கூடியவிகிதமான கத்தோலிக்கரை அடக்கியதாகும். அந்நாட்டிலுள்ள 5,231 குடிசனங்கள் எல்லோருமே கத்தோலிக்கர். இதற்கு அடுத்தபடியாக வடஅமெரிக்காவிலே பிரான்சின் ஆட்சியில் இருந்துவருகின்ற இரண்டேயிரண்டு இடங்களான சென்பியேர், மிக்குவெலன் எனும் இருதீவுகளுமே மிகக்கூடியவிகிதமான கத்தோலிக்க குடிசனங்களைக் கொண்டுள்ளன. இவற்றையடுத்து ஸ்பெயினும், இத்தாலியும் மிகக்கூடியவீதமான கத்தோலிக்கரை அடக்கியிருக்கின்றன. தொகையளவிலே பிறேசில்நாடு 4 கோடியே 75 லட்சம் கத்தோலிக்கருடன்கூடியதாய் முதலாவது ஸ்தானத்தையும், இத்தாலி 4 கோடியே 60 லட்சம் கத்தோலிக்கருடன்கூடியதாய் இரண்டாவது ஸ்தானத்தையும், பிரான்ஸ் 3 கோடியே 50 லட்சம் கத்தோலிக்கருடன்கூடியதாய் மூன்றாவது ஸ்தானத்தையும் வகித்திருக்கின்றன. 1953-ம் ஆண்டுக்குரிய "உலக மிஷன் தேசப்படம்" எனும் வெளியீட்டிலே இப்புள்ளிவிபரங்கள் காணப்படுகின்றன.

### யேசுசபையாரும் சீனஅகராதியும்

சீனவிலிருந்து நாடுகடத்தப்பட்டுள்ள யேசுசபைக்குருமார் பதினேழுபேர்சேர்ந்து பல பாஷைகளிலுமாகத் தற்காலத்துக்குரிய 1 லட்சத்து 80 ஆயிரம் புதியசொல்முறைகளை அட்டவணைப்படுத்தும் 15,000 சொற்களைக்கொண்ட சீனஅகராதி ஒன்றைத் தயாரித்துவருகின்றனர். இந்தவேலை சீனவைச்சேர்ந்த மக்காவோநகரிலே இருவருடங்களின்முன் தொடக்கப்பட்டு, தற்போது சீனத்தேசிய அரசாங்கத்தின் உறைவிடமாகிய போர்மோசாதீவைச்சேர்ந்த ராய்வான்நகரில் தொடர்ந்து நடைபெறுகின்றது. இதுமுற்றுப்பெற இன்னும் 18 மாசம் செல்லுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அகராதி ஐந்துபாகங்களாக வகுக்கப்பட்டுள்ளது. அவைகள் சீன-ஆங்கில, சீன—பிரான்சிய, சீன—ஹங்கேரிய, சீன—லத்தீனிய, சீன-ஸ்பானிய பாஷைச் சொற்களை அடக்கியுள்ளன. இந்தஅகராதி யேசுசபையைச் சேர்ந்த ஓர் ஹங்கேரியரான வண. சாமார் சுவாமியாரால் தொடக்கப்பட்டது. தற்போது இதற்குத் தலைமைவகித்துள்ளவர் ஓர் ஸ்பானிய யேசுசபைக்குரவரான வண. ஜுவான் கொயோயாகா சுவாமியாரே. இவர் தலைமையின்கீழ் ஸ்பானியர் ஆறுபேரும், பிரான்சியர் நால்வரும், ஹங்கேரியர்ஐவரும், இத்தாலியர் இருவருமாக யேசுசபைக்குருமார் பதினேழுபேர் பணியாற்றிவருகின்றார்கள்.

### அறை கூவுகின்றார்

இத்தாலிய கத்தோலிக்கசேவைப் பிரதமகாரியதரிசியாகிய சிஞ்ஞோர் லூய்ஜி ஜெட்டா அவர்கள் அந்நாட்டின் தலைமை வாய்ந்தகம்யூனிஸ்தர்களில்ஒருவரான லூய்கோ லொங்கோ என்பாருக்கு விடுத்துள்ள அறைகூவுதலிலே, இரும்புத்திரைக்குப் பின்னாலுள்ளநாடுகளில் திருச்சபை இருந்துவருகின்ற நிலைமைகளை விசாரணைசெய்வதற்காக அவைகளைத் தரிசிப்பதற்குக் கம்மிஷன் ஒன்றை அனுமதிக்கச்செய்வீரா? என்று கேட்டிருக்கின்றார். "கம்யூனிஸம் தனது உண்மையான சாயலை உலகத்துக்குக் காண்பிக்க மனத்தைரியம் கொள்ளவேண்டுமென்பதே அவரதுகேள்வியின் நோக்கமாகும். திருச்சபைசம்பந்தமான கத்தோலிக்க சேவைச் சுவரொட்டிவிளம்பரங்கள் அங்கு கம்யூனிஸ்தர்களுக்குப் பெரும்இடையூறாய் இருந்துவருவதையிட்டுக் கம்யூனிஸ்த தலைவர்கள் செய்த ஆட்சேபனையைஎதிர்த்ததிலிருந்தே கத்தோலிக்கசேவைப் பிரதமகாரியதரிசி முன்சொன்னவாறு அறைகூவலாயினர்.

### போன இரும்புக்கிரீடம்

இத்தாலியிலே மிலான்நகருக்குச் சமீபமாகவுள்ள மொன்ஸா எனுமிடத்தில் மகாபூச்சியத்துக்குரிய திருப்பண்டங்களில் ஒன்று அநேகநூற்றாண்டுகளாக அரியபொக்ஷம்போலக் காப்பாற்றப்பட்டுவருகிறது. கிறீஸ்துநாதர் அறையுண்ட திருச்சிலுவையிலிருந்து எடுக்கப்பட்ட ஆணிகளில்ஒன்று பதிக்கப்பெற்றபேரான "இரும்புக்கிரீட"மே அதுவாகும். இந்தக்கிரீடம்கொண்டு ஜேர்மனியசக்கரவர்த்திகள் ஒருவர்பின்ஒருவராக முடிசூட்டப்பட்டார்கள். பிறெடெறிக் பார்பறோஸா, நெப்போலியன் என்பவர்களும் இதனை அணிந்தார்கள். ஆனால், இந்தக்கிரீடம் உள்ளபடியே ஓர் இரும்புக்கிரீடம்அன்று. சுத்த தங்கத்தினால்செய்து பட்டந்தீராத விலையேறப்பெற்ற நவரத்தினங்கள் பதிக்கப்பெற்றதாகும். அவ்வாறாயின் இரும்புக்கிரீடம் என்றபெயர் எவ்வாறுஉண்டாயிற்று. பெரிய கொன்ரன்ரின்எனும் ரோமைச் சக்கரவர்த்தியின் தாயாரான அர்ச். எலேனா 326-ம்ஆண்டு பரிசுத்தநாட்டுக்குத் திருயாத்திரை செய்து அங்கே கண்டுபிடித்து எடுத்த திருப்பண்டங்களுள் திருமீட்பரைச் சிலுவையில்அறைய உபயோகித்த திருஆணிகளும் அடங்குவனவாகும். இவைகளையெல்லாம் அவள் இத்தாலிக்குக் கொண்டுசென்றாள். பிந்த லொம்பாடியைச்சேர்ந்த தியடோலின்டாஅரசி திருஆணிகளில் ஒன்றைப்பெற்று, லொம்பாடியமன்னர்கள் தரித்துவந்த இந்தக்கிரீடத்தினுள்வைத்துப் பதித்துவிட்டாள். இந்தப்பிரபலகிரீடமானது ஓர் இரும்புப்பேழையில்இட்டு அர்ச். அருளப்பரின் ஆலயத்திலுள்ள தியடோலின்டா இராணியின் சிற்றாலயத்தில்வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

# மரியகொறெற்றியின் வரலாறு

வண. W. L. A. டொன்பீற்றர் சுவாமியவர்கள் நேர்முகமாகக்கண்டு எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்

ரோமைநகரின் மத்திய ஸ்தானத்திலிருந்துபுகையிரதமார்க்கமாய் ஏறக்குறைய ஒருமணி நேரத்தில் நெற்றுனோபட்டினம் போய்ச்சேரலாம். இது மத்தியதரைக்கடலின் கரையோரமாகவுள்ள சிறியவோர் பட்டினம். சூழவரவிருக்கும் நாடுபகுதியிலுள்ள கடல்நீராடுவோர் அடிக்கடி வந்துபோகும் பட்டினமும் இதுவாகும். இங்கிருந்து வடக்குப்புறமாகச் சற்றுத்தூரத்தில் அன்சியோஎன்ற மற்றோர் பிரஸ்தாபம்பெற்ற கடல்நீராடுதலமும் இருக்கின்றது.

### பிரசித்திக்கு வரக் காரணம்

நெற்றுனோ, அன்சியோஎனும் இப்பட்டினங்கள் இரண்டும் 1944-ம் ஆண்டின் தைமாதத்திலே பத்திரிகைகளின் முற்பக்கச்செய்திகளில் பெரும்பிலக்கமாக அடிபடலாயின. அம்மாதம் 21-ந்திகதி யன்றிரவே இத்தாலிமீது படையெடுத்த பிரித்தானிய சைனியங்கள் வெற்றிகரமாக அன்சியோ பட்டினத்தில்கரையிறங்கின. அதேவேளையிற்றானே அமெரிக்க கப்பல்களிலிருந்து சைனியங்கள் நெற்றுனோபட்டினத்தின் கரைசேரலாயின. அங்ஙனம் கரையிறங்கியபோது நிகழ்ந்தபோரில் உயிர்துறந்த பட்டாளஅதிகாரிகளும், போர்வீரர்களுமான 7,400 பேரின் உடலங்கள் நெற்றுனோவிலுள்ள அமெரிக்க இராணுவ சேமக்காலையில் அடக்கஞ்செய்யப் பட்டிருக்கின்றன.

### மற்றோர் பெருங்காரணம்

நாம் நெற்றுனோ பட்டினஞ் செல்வோமானால், அஃது உலகமுழுவதிலுமிருந்து அங்கேவந்து கூடுகின்ற பன்னூற்றுக் கணக்கான மற்றவர்களைப் போன்று அப்போரில் மடிந்த வீரத்துவமிக்க போர்வீரர்களைக் கௌரவிப்பதற்காகவன்று. உலகத்துக்குச் சமாதானத்தையும், சுதந்திரத்தையும் கொண்டுவருமாறு தங்கள்ஆருயிரைத் தியாகஞ்செய்த அவ்வீரர்களை நன்றியறிதலுடன் ஞாபகப்படுத்துவதற்காகவுமன்று. ஆனால், ஓர் போரில்தானே — அதாவது பாவத்துடன்நடத்திய ஓர்வீரத்துவ போரில்தானே உயிர்துறந்த ஓர் பெண்மணிக்கு— மரியகொறெற்றியென்ற இளம் வீரநங்கைக்கு எமது வந்தனை வழிபாட்டைச்சமர்ப்பிப்பதற்கே என்க.

### வரப்பிரசாத மாதா கோவில்

நெற்றுனோவின் புகையிரத ஸ்தானத்திலிருந்து சில நிமிஷ நேரம் நடந்துசென்றால், கடற்கரையோரமாகவுள்ள வரப்பிரசாதமாதா கோவிலைப் போய்ச்சேருவோம். இந்தப் புராதன கோவிலிற்றான் அர்ச். மரியகொறெற்றிஅம்மாளின் புனித உடல் பூச்சியமாக இருந்துவருகின்றது. ஒருசில அடிதூரத்திற் கப்பால் கரைமீது ஒன்றின்பின் ஒன்றாக அலைகள்மோதுவதாலே கடலினின்றும் இடையறாது எழுந்துகொண்டிருக்கும் பேரிரைச்சலானது கோவிலுள்ளிருக்கும் விசுவாசிகள்செய்யும் செபவோசையுடன்கலந்து புகழ்ச்சிக்கீதம்ஒன்றைச் சிருஷ்டிகர்பால் உந்நதங்களைநோக்கி அனுப்பிக்கொண்டிருப்பதாக அக்கோவிலில் அமர்ந்திருக்கும் பக்தர்ஒருவர் உணர்ந்து கொள்ளுகின்றார். இற்றைக்குஐம்பதுவருடங்களின் முன் சின்ன மரியா கோவிலுக்கு அன்றேல்பட்டினத்துக்குப் போகக் கடற்கரைப்பக்கமாகவுள்ள இந்தப்பாதை வழியாகவே நடந்துசென்றாள்.

### மரியதாயாரும் மரியாவும்

கோவிலின் உயர்ந்த அடுத்தாருக்குமேல் அதிகம் பயபக்தியுடன் பூசித்து வணங்கப்படுகின்ற வரப்பிரசாத மாதாவின் திருச்சுரூபம் இருந்துவருகிறது. பலிபீடஸ்தானத்தைச் சூழவரவுள்ள சுவர்களிலே வெள்ளிகொண்டு செய்த எண்ணிறந்த இருதயங்கள் தொங்குகின்றன. இவைகள் வரப்பிரசாத மாதாவிடமிருந்து உபகாரசகாயங்கள் பெற்றுக்கொண்ட பக்தர்கள் சமர்ப்பித்துள்ள நன்றியறிதற் சின்னங்களே. அடுத்தார்முன்பாக நாம் முழந்தாட்படியிட்டு எமது நேத்திரங்களால் மாதாவை ஏறெடுத்துநோக்கும்போது, மரியதாயாரை அத்துணைபெரும் வேகரமாய்நேசித்த மரியா இற்றைக்கு ஐம்பதுவருடங்களின் முன்னே இந்தக் கோவிலுள் அடியெடுத்துவைத்த போதெல்லாம் இதே திருச்சுரூபத்தைப் பிள்ளைக்குரிய மிகுந்த பற்றுதலுடன் களங்கமற்ற அவள் கண்கள் ஏறெடுத்து உற்றுநோக்கியமை ஞாபகத்தில் ஓடிவருகின்றது. "எனது சின்னமகள் தேவதாயார்பட்டில் விசேஷ பக்திபற்றுதல் கொண்டிருந்தாள்; பரிசுத்த கன்னித்தாயாரின் படங்களை அலங்கரிப்பதற்கென்று புஷ்பங்கள் பறிப்பதற்காக வயல்கள்தோறுஞ்சென்று அலைந்துதிரிய ஆசித்தாள்; செபமாலை சொல்லப் பழகியபோது அதற்கேற்றவயது இன்னுமே அவளுக்கு இருக்கவில்லை; ஒவ்வோர் சாயந்தரமும் குடும்பத்துடன்சேர்ந்து செபமாலை செபிப்பது அவளுக்குப்பிரியமாயிருந்தது" என்று மரியாவின் தாயான அசுந்தா கொறெற்றி கூறுகின்றாள்.

### ஞாயிற்றுக்கிழமைப்பூசை

இந்தக்கோவிலிற்றானே மரியா முதல்நன்மை பெற்றுக்கொண்டாள். பாவசங்கீர்த்தனஞ்செய்ய அவள் இங்குதான் வந்தாள். பெறியேறே, கொங்கா, கம்போபோட்ரோ எனுமிடங்களில் பூசை இல்லாதபோது இங்குதான் அவள்பூசை காணவந்தாள். இந்தக்கோவி

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## சித்திரை மாதம்

**போதுக்கருத்து :**— மேற்றிராணிமார்களுக்காகவும், அவர்களுடைய திருமறைத் தொண்டுகளுக்காகவும் வேண்டிக்கொள்ளுதல்.

**மிஷன்கருத்து :**— வேதபோதக நாடுகளில் உபதேசிமார் அதிகரிக்கும்படியாக வேண்டுதல்.

## திருநாள் அட்டவணை

சித்திரைமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 10 | அ. மக்காரியார், மே. | (வெ) |
| சனி | 11 | அ. சிங்கராயர், பா. வே. | (வெ) |
| ஞா | 12 | தவளோற்சவ ஞாயிறு — அ. செயப்பர், வே. | (வெ) |
| திங் | 13 | அ. எர்மனெஜில்தப்பர், வே. | (சி) |
| செ | 14 | அ. யூஸ்தினப்பர், வே. | (சி) |
| புத | 15 | அ. அனஸ்தாசியம்மாள், வே. | (வெ) |
| வி | 16 | அ. சுவக்கீன், து. | (வெ) |

சத்தியவேத

# பாதுகாவலன்

1953-ம் ஆண்டு
சித்திரை மாதம் 9-ந் திகதி

## சமாதானம் ஏற்படுமா ?

"சீனர்களாகிய நாமும், கோறியமக்களும் உலகம்முழுவதிலுமே சமாதானத்தை ஆசிக்கும் மக்களுடன் ஒன்றுசேர்ந்து சமாதானத்தைப் பாதுகாக்கவும், யுத்தத்தை எதிர்க்கவும் விரும்புகின்றோம்; பல்வேறு சமூக பழக்கவழக்கங்களுடன் கூடிய தேசங்கள் உலகின்கண் ஏககாலத்திலே சமாதானமாக வாழ்ந்திருக்க முடியுமென்பதை உறுதியாக நம்புகிறோம்; நாம் சமாதானத்திலே மிகுந்த ஆர்வங்கொண்டவர்களாய்க் கோறியாவிலே யுத்தநிறுத்தத்தை உண்டுபண்ண வெகுவாக ஆசிக்கின்றோம்; கோறியபிணக்கு முழுவதையும் சமாதானமாகத் தீர்த்துவைப்பதற்காக நமதுபிரயத்தனங்களையெல்லாம்சாதகஞ் செய்கிறோம்" என்று சீனக்கம்யூனிஸ்தகட்சியின் அதிகாரபூர்வமான சாதனமாகிய "பீப்பிள்ஸ்டெயிலி" எனும்பத்திரிகை முழக்கஞ்செய்கின்றது. பான்முன்ஜொம் எனுமிடத்தில் கோறியயுத்தநிறுத்த சம்பாஷணை மறுபடியும் ஆரம்பாகுமுன் அது இவ்வாறுவரைந்து "கோறியயுத்தநிறுத்த சமரசப்பேச்சுகளைப் பாதிக்கக்கூடிய எந்தவித முட்டுக்கட்டையையோ, அன்றேல் சதிச்செயலையோ தடுத்துவைக்குமாறு சீனர்கள் தீவிர முயற்சிகள் செய்யவேண்டும்" எனத் தெரிவித்திருக்கின்றது. "கோறிய யுத்தநிறுத்தத்தைத் தாமசமின்றிக் காரியப்படுத்திவைப்பதும், சமாதான முறைகளைக் கையாடிக் கோறிய பிணக்கு முழுவதையும் தீர்த்துவைப்பதுமே சீனர்களினதும், கோறியமக்களினதும் கருத்தாகும்" என்றும் அப்பத்திரிகை நன்மனங்காட்டி எழுதியுள்ளது.

இவ்வாறு அது நன்மனங்காட்டி எழுதியதைத்தொடர்ந்து பான்முன்ஜொம் எனுமிடத்தில் கோறிய யுத்தநிறுத்த விஷயமாய்ச் சமரசப்பேச்சுகள்நிகழ்த்திய கம்யூனிஸ்தபிரதிநிதிகளுக்கும், ஐக்கியநாடுகளின்பிரதிநிதிகளுக்குமிடையே இணக்கம் ஏற்பட்டிருப்பதாகவும், கோறியாவிலே நோய்வாய்ப் பட்டவர்களும், காயமடைந்தவர்களுமான யுத்தகைதிகளை மாற்றிக் கொள்ளும்விஷயமாய்க் கம்யூனிஸ்தர்கள் கொணர்ந்தகேள்விகளை ஐக்கியநாடுகளின் பிரதிநிதிகள் ஏற்றிருப்பதாகவும் சமாச்சாரம் எட்டியிருக்கிறது. சோவியத்ருஷியாவும், அதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்தசீனாவும் கலந்துகொள்ளா திருப்பின் கோறியயுத்தம் இவ்வளவுதூரம் நீடித்துக் கோரமாக நடந்திருக்கவேமாட்டாது. லட்சக்கணக்கானமக்கள் உயிர்துறக்கவேண்டிய நிலைமையும் எழுந்திருக்கவேமாட்டாது. கோறியயுத்தத்தை நிறுத்திவைப்பதாகத் தேர்தல் காலத்திலே அமெரிக்க புதிய ஜனாதிபதியாகிய ஜெனறல் ஐஸன்ஹாவர் அளித்த உறுதிவாக்கை மேற்கொண்டு அவர் கையாடிய சிலவழிவகைகள் கம்யூனிஸ்தசீனாவைக் கண்விழிக்கச் செய்தனவெனலாம். போர்மோசாதீவுக்கும், செஞ்சீனாவுக்குமிடையே இருந்துவந்த ஏழாவது அமெரிக்ககடற்படை அகற்றப்பட்டமையும், சீனாவுக்கு யுத்த மூலப்பொருட்கள் செல்லாமல் தடுத்துவிடுதற்கான வழிவகைகள் செய்யப்பட்டமையும், பிறவும் கம்யூனிஸ்த சீனாவுக்குப் புத்திகற்பிக்கத் தொடங்கியுள்ளனவென்றே சொல்லலாம்.

ஆனால், கோறியாவிலே இருசாராரும் நோய்கண்டவர்களும், காயமடைந்தவர்களுமான யுத்தகைதிகளைத் தீவிரமாக மாற்றிமுடிப்பதானது, கம்யூனிஸ்த தலைவர்கள் தங்கள் சமாதான முயற்சிகளைச் சொல்லளவில் அல்ல, செயலளவில் சாதிக்கிறார்களென்பதற்குச் சுத்தமான ஓர்சான்றாகுமென்று அமெரிக்க ஜனாதிபதி ஜெனறல் ஐஸன்ஹாவர்கூறுகின்றார். கம்யூனிஸ்தசீனா கையிட்டிருக்கும் இந்தக் கோறிய யுத்தநிறுத்தமுயற்சியிலே ருஷியா கையிடாது கண்ணைமூடிக்கொண்டிருக்கிறதென்று நம்புதற்கிடமில்லை. அதன் கையிலே சூத்திரப் பொம்மைகளாக நின்றாடுகின்ற கம்யூனிஸ்தசீனாவும், கம்யூனிஸ்த வடகோறியாவும் சுபாவத்திலே தந்திரசூழ்ச்சி படைத்துள்ள அதன் சொற்படியல்லாது தங்கள்சுயஎண்ணத்தின்படி இதுவிஷயத்தில் இறங்கியிருக்குமென்று சொல்வதற்கிடமில்லை. கோறியாவிலே இதற்குமுன் இழுத்திழுத்துக் காலத்தை கடத்திக் கம்யூனிஸ்தர்கள் நடத்திய யுத்தநிறுத்த முயற்சியைத் தங்கள் யுத்தஅணியடுக்குகளைப் பலப்படுத்துவதிலே பயன்படுத்திக்கொண்டார்கள். அவ்வாறே இப்போதும் சீனக்கம்யூனிஸ்த தலைவர்களின் எடுப்பானது அதிகமான ஆக்கிரமிப்புஅடுக்குகளைச் செய்வதற்காகக் காலநேரத்தைக் கண்டுகொள்வான் சமாதானவேஷத்தின்கீழ் செய்யப்படும் ஓர் திருவிளையாடலென்று சுதந்திரதென்கோறிய அரசாங்கம் சொல்வதும் ஓர்வேளை உண்மையாயிருக்கலாம். என்னதந்திரம் செய்தாலும் அதுநெடுநாள் நின்றுபிடிக்கவே மாட்டாதன்றோ!

---

கர்த்தர் உத்தானத்தின்பின்

## 1-ம் ஞாயிறு

( தவளோற்சவ ஞாயிறு )

### சுவிசேஷ வாசிப்பு

(யுவா. 20 : 19–31)

அர்ச். யுவானியார் எழுதிவைத்தபடி பரிசுத்தசுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக் காலத்திலே ஓய்வுநாளுக்குப்பின் முதல்நாளாகிய அன்று, சாயரட்சையுமாகி, சீஷர்கள் கூடியிருந்தஇடத்திலே யூதர்களுக்குப்பயந்துகதவுகளும் பூட்டப்பட்டிருக்கையிலே, யேசுநாதர்வந்துஅவர்கள்நடுவேநின்று: உங்களுக்குச்சமாதானம் உண்டாவதாக! என்று அவர்களுக்குச் சொன்னார். அவர் இப்படிச் சொன்னபின், தம்முடையகைகளையும்விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆகையால், சீஷர்கள் ஆண்டவரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள். மீளவும் யேசுநாதர் அவர்களைநோக்கி: உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக! பிதாஎன்னை அனுப்பினதுபோல நானும்உங்களை அனுப்புகிறேன் என்றார். இவைகளைச்சொல்லி அவர்கள்மேல்ஊதி: இஸ்பிரீத்துசாந்துவைப்பெற்றுக் கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களுக்கு அவைகள்மன்னிக்கப்படும்; எவர்களுடைய பாவங்களை மன்னியா திருப்பீர்களோ, அவர்களுக்கு அவைகள் மன்னியாது விடப்படும்என்றார். யேசுநாதர் வந்தபோது பன்னிருவரில் ஒருவராகிய திதிமுஎனப்படுகிற தோமையார் அவர்களோடுகூட இருக்கவில்லை. ஆகையால், மற்றச்சீஷர்கள் கர்த்தரைக் கண்டோமென்று அவருக்குச் சொன்னபோது, அவர்: நான் அவருடையகரங்களிலே ஆணிகள்அறைந்ததுவாரத்தையும் கண்டு, ஆணிகள் இருந்தஇடங்களிலே என்விரலையும்விட்டு, அவருடையவிலாவில் என்கையையும் இட்டாலொழிய விசுவசிக்கமாட்டேன் என்று அவர்களுக்குச் சொன்னார். எட்டுநாட்களுக்குப்பின், மறுபடியும் அவருடையசீஷர்கள்வீட்டுக்குள்ளே இருக்கையில் அவர்களோடு தோமையாரும் இருந்தார். அப்பொழுது கதவுகள்பூட்டியிருக்க, யேசுநாதர்வந்து, அவர்கள்நடுவில்நின்று: உங்களுக்குச்சமாதானம் உண்டாவதாக! என்றார். பின்னும் அவர் தோமையாரைநோக்கி: இங்கே உன் விரலைஇடு. என்கரங்களைப்பார், உன்கையைநீட்டி என்விலாவில் வை, அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய்இருஎன்று திருவுளம்பற்றினார். தோமையார் அவருக்கு மறுமொழியாக: என் ஆண்டவரே, என் தேவனே என்றார். யேசுநாதர் அவரை நோக்கி: தோமாஸ், நீ என்னைக் கண்டதினாலல்லவோ விசுவசித்தாய்; காணாதிருந்தும் விசுவசித்தவர்கள் பாக்கியவான்கள் என்றார். அன்றியும் இந்தப்புஸ்தகத்தில் எழுதப்படாதவேறநேக அற்புதங்களையும் யேசுநாதர் தம்முடைய சீஷர்முன்பாகச் செய்தருளினார். ஆனால், யேசுநாதர் சருவேசுரனுடையசுதனாகிய கிறீஸ்துதாமேயென்று நீங்கள் விசுவசிக்கும்பொருட்டும், விசுவசித்து அவருடைய நாமத்தினாலே (நித்திய) சீவியத்தை அடையும்பொருட்டும் இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

கிறீஸ்துவே, உமக்குப்புகழ் உண்டாவதாக.

---

அர்ச். சூசையப்பரின்

## அடைக்கலத் திருநாள்

கொழும்புத்துறை

இத்திருநாள் வழமைப்பிரகாரம் கொழும்புத்துறைத்தாபனத்தில் வைகாசிமாதம் 3-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பத்திச்சிறப்பாகக் கொண்டாடப்படும். இத்திருநாளுக்குச் சமுகந்தரும்படி அர்ச். சூசையப்பரின் பக்தர்களையும், தாபன பழையமாணவர்களையும் அன்பாய்அழைக்கின்றோம்.

**நிகழ்ச்சிகள்**

**2-5-53** சனிக்கிழமை
மாலை 7-00 மணிக்கு மாலை ஆராதனை.

**3-5-53** ஞாயிற்றுக்கிழமை
காலை 7-00 மணிக்குப் பாடற்பூசை.
காலை 11 மணிக்குப் பழையமாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம்.
மாலை 4-30 மணிக்கு மாலை ஆராதனையும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும், திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதமும்.

தாபனத் தலைவர்
கொழும்புத்துறை
8-4-53

---

## மேய்ப்பர் பணியும் மேற்றிராணிமாரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுக்கத்தின் அழகு. அவர்களைக் கனம்பண்ணி மதிப்பதன் அவசியத்தை அழுத்தம் திருத்தமாய் அர்ச். பாப்பானவர் போதித்திருக்கிறார். மேற்றிராணியாருக்குக் கீழ்ப்படியாமல் இருந்தால் யேசுவோடு ஐக்கியமுள்ள சீவியம் சீவிக்க முடியாதுஎனத் தகுந்த காரணத்துடன் அவர் காட்டியிருக்கிறார். அர்ச். பாப்பானவர் திருச்சபையின் தலைவர். இதை நிராகரித்துத்தள்ளிவிட்டால், யேசுவின் சிநேகமும் முறிந்துபோகும். ஞானச்சரீரத்தோடு உறவு அற்றுப்போகும். மேற்றிராணியார் அந்தந்த மேற்றிராசனத்தில் பாப்பானவரின் பிரதிநிதி. மேற்றிராணியாரை இகழ்ந்துஅவமதிப்பது, பாப்பானவருக்கேநிந்தை. அதுபோல மேற்றிராணியாரைப்பாராட்டிப்புகழ்வது, பாப்பானவரைப் புகழ்வது என்று

கூறி இதற்கு ஆதாரமாகப் பெரியகிறகோரியாரின் அரிய மொழியை எடுத்தாண்டிருக்கிறார். "நமது சகோதரரின் ஒற்றுமைப்பலமே எனதுபெருமை. அவர்களில் ஒவ்வொருவருக்கும் காண்பித்த சங்கை எமக்குக் காண்பித்தது" என்று பெரிய கிறகோரியார் சொல்லுகிறார். நாம் சரிவரக் கற்றுணரவேண்டிய காரியம் இது. மேற்றிராணிமாரை உள்ளன்புடன் நேசிப்பது விசுவாசிகளின் பெருமை. அவரைப் புகழ்ந்துபாராட்டுவது பெரும் புண்ணியம். சிரம்பணிந்து கீழ்ப்படிவது கண்டிப்பான கடமை. நாம் திருச்சபையின் அன்பும், பணிவும்உள்ள பிள்ளைகளானல் ஞானச்சரீரத்தின் மேன்மைதங்கிய அங்கமாகிய மேற்றிராணிமார்களைச் சங்கித்து அவர்களுக்காகவேண்டிக்கொள்வது நமக்கு இனிமையாய் இருக்கும். தினமும் அவர்களுக்காகச் செபிக்கவேண்டும் என்று திருச்சபையே தனது செயலால் தெளிவுபடுத்துகின்றது. ஒவ்வொருநாளும் பூசைநேரத்தில் எழுந்தேற்றம் ஆகிறதற்குமுன், குருவானவர்மேற்றிராணியாரின் பெயரைச்சொல்லி அவருக்காக யேசுவிடம் மன்றாடிவரும்படி வற்புறுத்துகிறது.

## மரியகொறெற்றியின் வரலாறு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லுக்குவரப் பெறியேறே எனுமிடத்திலுள்ள தனது வீட்டில் இருந்து ஏழுமைல்தூரம் அவள் நடக்கவேண்டியிருந்தாள். போகவர அவள் பதினன்கு மைல்தூரத்தையும் நடந்துசெல்ல நான்குமணிநேரம் பிடித்தது. ஞாயிற்றுக்கிழமைப் பூசை காண்பதற்காக இவ்வளவு தூரம் நடந்துசெல்ல அவளுக்குக் கடமையில்லை. ஆனல், அவளுக்கிருந்த வேதவிசுவாசமும், அவளைத்தூண்டி வழிநடத்திய தாயின்விசுவாசமும் காரணமாக இது ஒருதூரமாக அவளுக்குக் காணப்படவில்லை. அதிகந்தூரமாய் இருக்கிறதேயென்று அவளின் சிறிய சகோதரர்கள் எண்ணுவார்களோவென்று சிலவேளை அஞ்சிய மரியா வழிநீளம் அவர்களுக்குக் கதைகள் சொல்லிக்கொண்டு போவாளென்று அவளின்தாயான அசுந்தா கூறுகின்றாள்.

(தொடரும்)

## முடிசூட்டுவிழாத் தரிசகர்கள்

வருகிறஆனிமாதத்திலே மாட்சிமைதங்கிய எலிசபேத் மகாராணியாரின் முடிசூட்டுவிழாவைக் கண்டுகொள்ளுமாறு இலங்கையிலிருந்து கப்பல்களிலும், ஆகாயவிமானங்களிலும் லண்டன்நகருக்குச்செல்ல இதுவரை ஆயிரம்பேர்வரையில் பிரயாணஒழுங்குகள் செய்திருக்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பிரயாணச் செலவுக்கென்றும், பிறசெலவுக்கென்றும் தலைக்குப் பதினுயிரம்ரூபா வரையிலே கொண்டுசெல்லவிருக்கின்றார்கள். அதனல் இந்தஆயிரம்பேரும் செய்யும் பிரயாணத்தாலே மொத்தமாக ஒருகோடி ரூபாவரையில் இலங்கைக்கு வெளியேசெல்லுமென மதிப்பிடப்படுகிறது.



சதா சகாய மாதாவின் கோணம்

## ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள்

பலமாதங்களுக்குமுன் ஐக்கியஅமெரிக்கதேசத்திற் பிரசுரமாகும் ஒருபுதினப்பத்திரிகையில், பொதுசன அபிப்பிராயப்பந்தியில் ஒருவினு பொறிக்கப்பட்டிருந்தது. "எக்காலமும் போற்றத்தகும் அதிமகத்தான ஸ்திரியார்?" இதுதான் அந்தவினு. இந்தவினுவுக்கு விடைசொல்வது கஷ்டமா? எக்காலமும் போற்றத்தகும் அதிமகத்தான ஸ்திரி ஒருவர்மாத்திரந்தானே இருக்கிறார். தேவனின் தாயாகிய கன்னிமரியம்மாள்தான் அந்தஸ்திரிஎன்று தடையில்லாமல் விடையிறுக்கலாமேஎன்று உங்களுக்குத் தோன்றலாம். இந்த மறுமொழியே சரியானதென்றும், மற்றெந்த மறுமொழியும் வெறுமொழியென்றும் கத்தோலிக்க கிறீஸ்துவன் எவனும் தீர்க்கமான முடிவுகட்டலாம்.

இந்தக்கேள்விக்கு மறுமொழிகூறுமாறு, ஆறுஆண்களும், ஆறுபெண்களுமாகப் பன்னிரண்டுபேரிடம் கேட்டபோது, ஒருமனிதன்மாத்திரம் சரியான மறுமொழி கூறினுன். இரண்டுமனிதர் ஐக்கியஅமெரிக்கதேச ஜனுதிபதியாக விளங்கியிருந்த றூஸ்வெல்ற்றின்பாரியார் எலியனோர் என்றனர். மற்றையோர் கிளியோபற்றிறு, கூறிஅம்மையார், புளொறென்ஸ் நைற்றிங்கேல் என்போருக்குத் தம்சீட்டை வழங்கித் தெரிவுசெய்தனர்.

பெண்கள் நூற்றுக்கு நூறுவீதம் தோல்வியடைந்தனரென்றே சொல்லலாம். ஏவாள், சாய்ப்மன்காற், கூறி அம்மையார், புளொறென்ஸ் நைற்றிங்கேல், சிஸ்ரர் கென்னி, அர்ச். யோன் அவ் ஆர்க் அம்மாள் என்பவர்களையே இவர்கள் முதலிடமாகத் தெரிவுசெய்திருந்தார்கள். இவர்களிற்சிலர் இரண்டாம்இடத்துக்கு ஒருஅளவில் அருகராகஇருந்தாலும் முதலாம்இடம்வகிக்கச் சற்றேனும் அருகதையுடையோரல்லர்.

யூடித், றூத், றெபெக்கா, எஸ்தேர், அர்ச். ஹெலெனு, அர்ச். யோன்அவ் ஆர்க்அம்மாள், அவிலாவின் அர்ச். தெரேசம்மாள், அர்ச். சின்னத்தெரேசம்மாள் போன்றவர்கள் எக்காலத்தும் பாராட்டப்படத்தக்க உத்தமிகள். தங்கள்காலத்தில்அல்ல, பிற்பட்டகாலங்களிலும் தங்கள்சக்தியின் பலத்தைக் காண்பித்த இவர்கள்தானே தேவதாயாகிய கன்னிமரியம்மாளைத் தங்கள் மேல்வரிச்சட்டமாக ஒப்புக்கொள்வோராவர்.

சருவேசுரன்தாமே அனுப்பிய தேவதூதனுலும், தேவ அருளாற் தூண்டப்பட்ட மரியாயின்மைத்துனியாகிய எலிசபேத்தம்மாளாலும் "ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்று வாழ்த்தப்படப் பாத்திரமானவள் நம்தேவமாதா அல்லவா?

மரியம்மாள் தேவவரப்பிரசாதத்தால் ஏவப்பட்டு, அறிக்கையிடுவதை அவதானித்துப்பாருங்கள்: "வல்லபம் மிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்திற்செய்தருளினுர்...... இதோ இக்காலமுதல் எல்லாத்தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதியென்று சொல்லும்."

தேவனின்தாயாக ஒரு ஸ்திரிமாத்திரம் தெரியப்பட்டதினுல், அதிமகத்தான ஸ்திரியின்பதவிக்கு அவர்மாத்திரம் உரித்துடையவவாவார். தேவமாதாபட்டத்தைத் தவிர்ந்த எந்தப் பட்டமும் எந்தஸ்திரியையாவது முதல் ஸ்திரிபதவிக்கு வைக்கமுடியாது. தேவமாதாவைப்போல பிரசாதபூரணியான பரிசுத்தமானஸ்திரி பூமியிற் தோன்றியதுமில்லை; தோன்றப்போவதுமில்லை.

ஆதித்தாய்தகப்பன் கட்டிக்கொண்ட சென்மபாவத்தின்தோஷம் அற்பமுமில்லாமல் உற்பவித்த ஒரேயொரு சிருட்டி தேவமாதாவாம் கன்னிமரியம்மாளன்றி மற்றெருவருமில்லை. பாவமில்லாத, பாவத்தின்நிழல்தானும் அணுகாதமானிடப்பிறவி கன்னிமரியம்மாளேதவிர வேறெருவருமில்லை. கன்னியும்தாயும்என்ற ஒப்பில்லாக் கீர்த்திப்பட்டம் பெற்றஸ்திரி இப்புவியில் வேறுஒருவருமில்லை. ஒரேஆளைப் பிதாவாகிய சருவேசுரனும், தேவமாதாவும் 'சுதன்'என்று அழைக்கிறார்கள்! இந்தஉரிமை — இந்தவல்லபம் வேறெந்தஸ்திரிக்கும் இல்லை.

தேவசுதன் அவவுடைய கட்டளைகளுக்கும், விருப்புகளுக்கும் அமைகிறார். மரியம்மாளுக்கும், கைத்தாதையாகிய சூசையப்பருக்கும் கீழ்ப்படிந்து நடக்கிறார். கானுஊரில்நடந்த கலியாணவீட்டில் தமது நேரம்வருமுன்னரே தேவதாயின் விருப்புக்கமைந்து தமது முதலாவதுபுதுமையைச் செய்கிறார். தேவன் இன்னும் அவவுடைய விருப்புக்கமைகிறார்என்பதற்கு லூர்துபதி, பாத்திமா, றோமைமாநகரத்திலிருக்கும் சதாசகாயமாதா க்ஷேத்திரம் முதலிய நூற்றுக்கணக்கான யாத்திரைத்தலங்கள் போதிய அத்தாட்சிகளன்றோ!

உலகில்எக்காலமும் போற்றத்தகும் அதிமகத்தானஸ்திரி கன்னிமரியம்மாளே தவிர வேறெருவருமில்லை. எங்களுக்குத்தேவையான இகபர நன்மைகளைத் தேவகுமாரனிடமிருந்து பெற்றுத்தரவல்லபமுடையவ கன்னிமரியம்மாள். ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவ நமது சதாசகாயமாதா. அவவை அண்டி அருள்பெற்று உய்வோமாக.

## நாமும்......

— I —

மீளாத் துயருறும் வேளையிலே — யேசு
மீட்பர் விழித்திருந் தேசெபித்தார்
நாளுங் கவலைகள் மத்தியிலே — ஈசன்
நற்றுணை வேண்டிச் செபித்திடுவோம்

— II —

காறி யுமிழ்ந்தனர் பொன்முகத்தில் — திருக்
கன்னத் தடிக்கப் பொறுத்திருந்தார்
ஊறுங் கருணைப் பெருக்குடையான் — அருள்
உள்ளந் தனைக்கண்டு நாஞ்சகிப்போம்

— III —

பாவக் கொடுமையைத் தோளினிலே — மலைப்
பாறைகள் மீது சுமந்திளைத்தார்
கோரத் துயரச் சுமைகளைநாம் — அவர்
கூடச் சுமந்துபின் னேகிடுவோம்

— IV —

பொல்லாத யூதர் கொடுஞ்செயல்கள் — தமைப்
பூரணன் மன்னித்தருள் புரிந்தார்
கல்லான வன்மன மற்றிடவே — யேசு
கர்த்தன் அடிதனைப் பற்றிடுவோம்

— V —

அன்பினுக் காகத்தம் மாருயிரைப் — பலி
ஆகக் கொடுத்த பரஞ்சுதனுர்
அன்பினுக் காகவே எம்முயிரை — நாமும்
அர்ப்பணஞ் செய்து சுகித்திடுவோம்

"ஜெயம்"

சாட்டி, சிந்தாத்திரை மாதாவின்

## சித்திரைத் திருநாள்



7-4-53 ஆகிய செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி

11-4-53 ஆகிய சனிக்கிழமை வேஸ்பர் ஆராதனையுடனும்

12-4-53 ஆகிய ஞாயிற்றுக்கிழமை காலை பாடற்பூசையுடனும் முடிவடையும்.

S. A. ஞானப்பிரகாசம்,
கட்டளைக்குரவர்

மண்டைதீவு,
24-3-53.

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

இந்தமாதம் செப அப்போஸ்தல சபையின் பொதுக் கருத்து என்ன? மேற்றிராணிமாருக்காகவும், அவர்களின் திருமறைத் தொண்டுகளுக்காகவும் மன்றாடிக் கொள்வதுதான். அதனால், நாம் இந்த மாதத்திலே உலகின் சகல மேற்றிராணிமாருக்குமாக அதிகம் கருத்தாக மன்றாடிவருவோம்! விசேஷமாய் எம்மேற்றிராணியாண்டவரை அதிகமாக நினைந்து அவருக்காக விசேஷ விதமாய் மன்றாடிவர மறவாதிருப்போம்! ஏனெனில், அவரே எமது ஞானமேய்ப்பர். பரிசுத்த பாப்பாண்டவரின் பதிலாளியாக இருந்து எம்மை ஆண்டு நடத்தி வருகின்றார். அதனால் பாப்பாண்டவரின் இடமாக அவரையே எமது கண்கண்ட தலைவராகக் கண்டுகொள்ளுகிறோம். ஆகவே, அவரை நேசிப்பதும், அவரைச் சங்கிப்பதும், அவர் சொற்கேட்டுப் பணிந்து நடப்பதும் பாப்பாண்டவரையே நேசிப்பதும், சங்கிப்பதும், பாப்பாண்டவரின் சொற்கேட்டுப் பணிந்து நடப்பதும் போல் ஆகும். எமது மேற்றிராசனத்தைப் பரிபாலனம் செய்வதாகிய பெரும் பாரமான கடமையை எம் ஞானஆயர் கொண்டிருக்கின்றார். எமது மேற்றிராசனத்திலே எம்திருவேதம் அடையும விருத்தியும், சிறப்பும், செழிப்பும் ஆதியன எல்லாம் அவரது திருமறைத் தொண்டுகளிலே தங்கி இருக்கின்றன. ஆதலால், நாம அவருக்காகவும், அவரது திருத்தொண்டுகள் சிறந்தபலன் அளிக்கும் படியாகவும், இந்த மாதத்தில் மாத்திரம் அல்ல, எந்நாளுமே விசேஷவிதமாக மன்றாடிவருவோமாக!

உங்கள் அன்புள்ள
அண்ணா

## உயிர்த் தெழுந்தார்

— I —

கல்லறை திறந்தது
காந்தியும் நிறைந்தது
வல்லபன் உயிர்த்தனன்
வஞ்சகர் திகைத்தனர்

— II —

ஆதவன் முகத்தினன்
ஆவிபெற் றெழுந்தனன்
பாதகர் பதைக்கவே
பரஞ்சுடர் எழுந்தனன்

— III —

மானிலம் புரக்கவே
மாய்ந்தவன் எழுந்தனன்
வானவர் வணங்கவே
வானவன் எழுந்தனன்

— IV —

மண்ணகம் மலர்ந்தது
மாபரன் எழுந்தனன்
விண்ணகம் மகிழ்ந்தது
வேந்தர்கோன் எழுந்தனன்

— V —

எங்குரு நாயகன்
எழுந்தனன் எழுந்தனன்
மங்கலப்பண் பாடுவோம்
மாபதம் வணங்குவோம்

"ஜெயம்"

## சுசீலாவும் இரஞ்சிதமும்

சுசீலாவும், இரஞ்சிதமும் ஒரேவகுப்பில் பயிலும் மாணவிகள். தைமாதம் பாடசாலை ஆரம்பமானது. வகுப்பு ஏற்றத்தில் இருவரும் ஒரேவகுப்பிற்கு வந்தார்கள். சீக்கிரத்தில் இணைபிரியாச் சிநேகிதிகளாகி விட்டனர்.

மாசிமாதப் பனி இரஞ்சிதத்தைக் கடுமையாய்த் தாக்கிவிட்டது. அதனால் அவள் ஒருகிழமை பாடசாலைக்கு வரவில்லை. அவள் பூரண சுகம் அடைந்து திரும்பவும் பாடசாலைக்கு வரப் பத்துநாட்கள் செல்லும்என்று அவளுடைய தகப்பனார் தலைமை ஆசிரியருக்கு அறிவித்திருந்தார். இரஞ்சிதத்தைக் காணாமல் கவலை கொண்டிருந்த சுசீலா இந்தச் செய்தியை அறியவந்ததும் அதிககவலையும், அங்கலாய்ப்பும் கொண்டாள்.

வெள்ளிக்கிழமை பின்னேரம் தனது அம்மாவிடம் விடைபெற்றுக்கொண்டு சுசீலா இரஞ்சிதத்தைச் சந்திக்கப் போனாள். சுசீலாவைக் கண்ட இரஞ்சிதம் கார்கண்ட தோகைபோல் ஆனாள். அருகில் உட்கார்ந்து வெகு நேரமாக இருவரும் சம்பாஷித்தனர். சுசீலாவின் வரவும், சம்பாஷணையும் வாடிய பயிருக்கு வான்துளி போன்று இரஞ்சிதத்திற்குப் புத்துயிர் அளித்தது. சுசீலா விடைபெற்று வீடு திரும்பினாள்.

சுசீலாவின் அப்பா அப்பொழுது தான் கந்தோரிலிருந்து வீட்டிற்குவந்திருந்தார். மனைவிகொடுத்த தேநீரை அருந்திவிட்டு ஈச்சாரில் படுத்து அன்றைய தினசரியைப் படித்துக்கொண்டிருந்தார். சுசீலாவின் காலடிச் சத்தத்தைக் கேட்டு "என்னசுசீ! இப்பொழுதுதான் பாடசாலை விட்டதோ? ஏன் இவ்வளவு தாமதம்?" என்று கேட்டார்.

"நான் அப்பொழுதே வந்துவிட்டேன் அப்பா. அம்மாவிடம் கேட்டுக்கொண்டு இரஞ்சிதம் வீட்டுக்குப் போனேன்" என்றாள்.

"ஏன், அங்கே என்ன விசேஷம்?"

"இரஞ்சிதத்துக்குச் சுகமில்லை. தடிமலும், காய்ச்சலும் இருக்கிறது. மிகவும் கஷ்டப்படுகிறாள். நான் அவளைச் சந்திக்கப் போனேன். இந்தக் கிழமை முழுவதும் அவள் பாடசாலைக்கு வரவேயில்லை. காய்ச்சல் காய்ந்த வேளையில் என்னைக் கூப்பிட்டாளாம் என்று அவளுடைய அம்மா சொன்னாள்" என்றாள்.

"இவ்வளவு நாட்களாய் வருத்தமாய் இருந்தவளை இப்பொழுதுதானே சந்திக்கப்போனாய்?"

"என்னப்பா! நான் மூக்குச் சாத்திரம் பார்க்கிறதா? இரஞ்சிதம் பாடசாலைக்கு வரவில்லை என்று தெரியும். ஆனால் அவளுக்கு வருத்தமென்று இன்றுதான் தலைமை ஆசிரியர்மூலம் அறிந்தேன். அறிந்தவுடன் சந்திக்கச் சென்றேன். இப்பொழுது அவளுக்கு வருத்தம் குறைந்திருக்கிறது. நாளைக்கும் ஒருக்கால் போய்ப் பார்க்கட்டுமா அப்பா?" என்று சொல்லிக் கொண்டு சுசீலா தகப்பனின்மடியில் உட்கார்ந்தாள்.

"ஆம், சுசீ! அப்படிச்செய்யலாம்... இன்னும் ஒருவர் உன்வரவைக் காத்துக்கொண்டு இருக்கிறார். இரவு பகலாய் உன்னை நினைத்துக்கொண்டு இருக்கிறார். அவரை நீ......" என்று இழுத்தார்.

"அது யாரப்பா? நீங்களா? நீங்கள் தான் வீட்டில் இருக்கிறீர்களே. ஒவ்வொருநாளும் உங்களைக் காணுகிறேனே."

"நான் அல்ல மகளே! என்னைவிட அதிகம் உன்னை நேசிக்கிறார் ஒருவர். அவர் யாரென்று உனக்குத் தெரியும்."

"சின்னயேசுவா? நாம் அவரைச் சந்திக்க வேண்டுமா?"

"ஆம், மகளே! யேசு இரட்சகர் எங்கள் வரவைக் காத்துக்கொண்டு இருக்கிறார். நாம் அவரை அடிக்கடி சந்திக்கவேண்டும். எங்கள் நேசத்தையும், வணக்கத்தையும் அவருக்குச் செலுத்த வேண்டும். நாம் நற்கருணை நாதரைச் சந்தித்தால் அவர் சந்தோஷம் அடைவார். அவ்வேளை நாம் செய்யும் மன்றாட்டால் அவரில் நம்பிக்கை உண்டென்று காண்பிக்கிறோம். நம்பிக்கை நேசத்தை வளர்க்கும். அது அவருக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும்."

"அப்படியாயின் நான் நற்கருணையில் வீற்றிருக்கும் எங்கள் நேச ஆண்டவரை அடிக்கடி சந்தித்து அவருக்கு நேசங் காட்டி அவரைச் சந்தோஷப் படுத்தத் தெண்டிப்பே" னென்று சொல்லிச் சுசீலா தன் உடைகளை மாற்ற அறைக்குள் சென்றாள்.

## லாசர்

தலைமை ஆசிரியரின் 25-ம்வருட யூபிலி அன்று வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பழையமாணவர் பலர் சமுகங்கொடுத்து விழாவைச் சிறப்பித்தனர். பூமாலைகளாலும், பாமாலைகளாலும் எல்லோரும் ஆசிரியரைப புகழ்ந்து பாராட்டினர். பலர் அருமையான சொற்பொழி வாற்றினர். ஈற்றில் ஒரு பிரமுகர் எழுந்து பேச ஆரம்பித்தார்.

என்னைப்போல, சிறுவயதிலேயே, ஊதாரியாகக்குடித்து, வெறித்தவர்கள் வேறுயாரும் இருக்க முடியாது என்று அவர் ஆரம்பத்தில் உரைத்ததும் எல்லோரும் ஆச்சரியத்தோடு அவர் பேச்சை அவதானித்தனர். அவர் தொடர்ந்து பேசினார்.

என் கல்விக்காலத்தில் நான்செய்த பலகுறைகளால் பெற்றோர் ஆறாக்கவலை அடைந்தனர். என்பெற்றோரின் நற்பெயரையும், பொருளையும், அழித்துக் குடிகாரனாக நான் அலைந்து திரிந்தேன். இதோ! சபையின் நடுநாயகனாக இலங்கும் பெரியார்—தலைமைஆசிரியர் அவர்கள் நயத்தாலும், பயத்தாலும் எத்தனை எத்தனையோ புத்திமதிகளை நாளும் பொழுதும் போதித்துவந்தார். நான் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

ஒருநாள் என்னைப்பற்றிய கவலையாற் படுக்கையிற் படுத்த தந்தையார் மரண அவஸ்தையில் இருப்பதாகத் தாயார் அறிவித்திருந்தாள். கல்லூரிக்குச் செய்திவந்தது. அந்தச்சமயத்தில் நான் அங்கில்லை. என்னைப்போன்ற பல கெட்டநண்பர்களுடன் மதுபானக் கடையில் குடித்து வெறித்து ஊதாரியாகப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தேன். அன்பும், கருணையும் நிறைந்த ஆசிரியர்அவர்கள் பலஇடங்களிலும் என்னைத்தேடி அலைந்து கடைசியாய் அங்குவந்தார். நான் அவரைக்கண்டு நடுங்கினேன். அவர் என்னைக்கண்டு கலங்கினார். "லாசர், புறப்படு" என்றார். "முடியாது" என்றேன். அவர் கண்கள் கோபக்கனலைக் கக்கின. குடிவகைப் போத்தல்கள் இருந்த மேசையை ஓங்கி உதைத்தார். என்கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார். ஒன்றும்பேச முடியாதவனாய் வீட்டை நோக்கி நடந்தேன்.

அதன்பின்பு நடந்ததை இப்போது எண்ணினாலும் என்கண்கள் கலங்குகின்றன. கோபவெறியில் என்னைப் பிடித்து வெளியேதள்ளிய ஆசிரியர் சாந்தமே உருவாக வந்து என்னை அணைத்து "லாசர்! நீ மனிதனாகமாற வேண்டும்; நீ என்னுடைய மாணவனாக வாழவேண்டும்" என்று அன்பொழுகக் கேட்டார். மேலே பேச முடியாமல் கலங்கி அழுதார். என் இருதயம் பொடிப் பொடியாகி விட்டது. அவர்காலில் வீழ்ந்து நான் புலம்பினேன். அவர் என்னை அணைத்துத் தேற்றினார். அன்றுமுதல் இன்றுவரை என்தந்தையின் மரணத்தின் பின்பு என்அருமைத் தந்தையாக இந்தப்பெருமகனை நான் மதிக்கிறேன். குடியைமறந்து என்வாழ்வைப் புனிதப் படுத்தினேன். முற்றும் புதிய மாணவனாக மாறினேன். படிப்பில் ஆர்வம்கொண்டு கற்றேன். பரீட்சைகளில் முதல்தரமாகச் சித்தியடைந்தேன். மேற்படிப்புக்காக மேலைத் தேசம் சென்றேன். எங்கள் ஆசிரியரின் புத்திமதியின்படி கல்விகற்றுத் திரும்பினேன். இன்றுநான் நீதிவானாகப் பதவி ஏற்றுள்ளேன். என்னுடைய இந்தஉயர்ந்த பதவிக்கு வழிகாட்டியாக இருந்தவர் இதோ உங்கள் முன்னிலையில் இருக்கும் இந்தப் புண்ணியவான் என்று சொல்லி முடித்து ஆசிரியரின் பாதங்களைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டார். எல்லோர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் துளித்தது.

"போன்"

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது சகோதரிக்குண்டான சுவாதம் என்னும் கடும்வருத்தம் குணமாகும்படி யேசுவின் திருஇருதய இரக்கத்தையும், சதாசகாயமாதாவின் சலுகையையும் இரந்து வேண்டிநின்றோம். அற்புதமாகச் சுகம்கிடைத்தது. நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கின்றேன்.

J. S.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயநாதரின் இரக்கத்தினாலும், சதாசகாயமாதாவின் இடைவிடாத மனுப்பேசுதலினாலும், அர்ச். அந்தோனியாரின் வேண்டுதலினாலும் நான்கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

அல்லைப்பிட்டி ஞா. அரியமலர்

## உங்களுக்குத் தெரியுமா?

**1.** எந்தச் சந்தர்ப்பத்திலே பிரதானஆசாரியரும், பரிசேயரும் யேசுநாதரைக் கொலைசெய்ய வேண்டுமென்று முடிவுகட்டினார்கள்?

மரித்துஅடக்கஞ்செய்யப்பட்டிருந்த லாசரை அவர்உயிர்ப்பித்த பிறகுதான். "அந்நாள்முதல் அவரைக் கொலைசெய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள்." (அரு. XI—53)

**2.** வழமையிலே கடுதாசிசெய்யப் பாவிக்கப்படும் பொருட்கள்எவை?

கடுதாசிசெய்ய வழமையிலே பாவிக்கப்படும் பொருள் மரப்பசையாகும். எஸ்பாட்டோ என்றபுல்லும் அதிகமாகப் பாவிக்கப்படுகிறது. ஆனால், அதிகம்சாதாரணபொருள் பைன்மரப் பசையேயாகும்.

**3.** உலகின் மகாப்பிரமாண்டமான கடற்படையைக்கொண்டிருக்கும் தேசம்யாது?

ஐக்கிய அமெரிக்கதேசமே.

**4.** அமெரிக்கஜனாதிபதி ஜெனறல் ஐஸன் ஹாவருக்கு வாரந்தோறும் எத்தனைகடிதங்கள் வருகின்றன?

சராசரியாக 25,000 கடிதங்கள் வருகின்றன. அவற்றிலே பலகடிதங்களுக்கு அவரே கைப்படப் பதிலளிக்கின்றார். சகலகடிதங்களும் அவர் பார்வைக்கு வருகின்றன.

**5.** "கூட்ரென்பேர்க் பைபிள்"என அறியப்படும் வேதபுத்தகத்தைப் பற்றிய வரலாறு யாது?

அப்போது நவமாகக் கண்டுபிடிக்கப்பட்ட அச்சியந்திரங்கொண்டு அச்சிடப்பெற்று வெளியான முதலாவது புத்தகமே "கூட்ரென்பேர்க் பைபிள்" என அறியப்படும் வேதபுத்தகமாகும். இதுபிரசுரமான ஐந்தாம்நூற்றுண்டு விழா சிலமாதங்களின் முன்னரே கொண்டாடப்படலாயிற்று. இது கத்தோலிக்கவேதபுத்தகத்தில் அடங்கியுள்ள புதியஏற்பாடாகும். அக்காலத்திலே ஜேர்மனிமுழுவதும் ஓர்கத்தோலிக்கநாடாய் விளங்கியிருந்தது. அச்சியந்திரத்தை முதன்முதலாகக் கண்டுபிடித்த கூட்ரென்பேர்க் எனப்பெயரிய ஜேர்மனியரும் மிகுந்தபக்திவைராக்கியமுள்ள ஓர்கத்தோலிக்கராய் விளங்கியிருந்தார். இவர் அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்தமையானது உலகில் பெரும்மாற்றத்தை உண்டுபண்ணியது. அதற்குமுன் தினசரிப்பத்திரிகையோ, வாரப்பத்திரிகையோ, மாதச்சஞ்சிகையோ, அச்சேற்றியபுத்தகமோ பிரசுரமாகவில்லை.

**6.** ஸ்பானியபோர்வீரர்களை ஜெனறல் பிராங்கோஅவர்கள் யாருக்கு அர்ப்பணஞ்செய்திருக்கின்றார்?

பரிசுத்த கார்மேல்மாதாவுக்கு அர்ப்பணஞ்செய்திருக்கின்றார். மேலும் ஸ்பானியசேனையின் பிரதமசேனாபதியாகவும் கார்மேல்நாயகியையே ஏற்படுத்தியிருக்கின்றார். அதனால் தேவதாயாரது தலைமையின்கீழ் உலகில்இதுவரை யுத்தத்திலும், சமாதானத்திலும் கம்யூனிஸத்தை வெற்றிகொண்டுள்ள ஒரேயொருநாடு ஸ்பெயினென்று சொன்னால் ஆச்சரியமாகமாட்டாது.

**7.** அர்ச். பேதுருவானவரினதும், அர்ச். பாவிலுவானவரினதும் திருக்கபாலங்கள் எங்கே பூச்சியமாகவைத்துக் காப்பாற்றப்படுகின்றன?

ரோமாபுரியின் நான்கு மகாலயங்களில் ஒன்றாகிய அர்ச். லத்தறன் அருளப்பரின் மகாலயத்திலுள்ள பாப்பரசரின் பலிபீடத்தில்வைத்துக் காப்பாற்றப்படுகின்றன. தலைமுதல் மார்பளவாய்ச்செய்த இரு அப்போஸ்தலர்களினதும்திருச்சுரூபங்களில் இவைகள் அடங்கியிருக்கின்றன.

**8.** கத்தோலிக்க திருச்சபையிலே மெழுகுவர்த்திகள் பாவிக்கப்படுவதற்கான முக்கியநியாயம் என்ன?

திருச்சபை மூன்று நூற்றாண்டுகளாக "கற்றக்கோம்ஸ்" எனப்படும் சுரங்கஅறைகளில் சஞ்சரித்திருந்த போது, செயற்கைவெளிச்சத்தைப் பாவிக்கவேண்டிய அவசியம்ஏற்படலாயிற்று. அக்காலத்திலே நாம்அறிந்துள்ள மின்சாரவிளக்குகளோ, அன்றேல் பிறவிளக்குகளோ இருக்கவில்லை. ஆனால், முக்கியநியாயம் யாதெனில், மெழுகுவர்த்தியானது இளந்தேனீ உற்பத்திசெய்யும்பொருளாய், உலகத்தின்ஒளியாகிய கிறீஸ்துநாதரின் அறிகுறியாய்இருப்பதேயாம்.

## நானு சங்கதிகள்

— சமாதானகாலத்திலே ஐரோப்பிய கடல்களிலோ, அன்றேல் உலகின் வேறெந்தப்பகுதியிலோ இதுவரை காணப்பட்டிராத யுத்தக்கப்பல்களின் மிகப்பிரமாண்டமான ஓர்அணிவகுப்பு வருகிறஆனிமாதம் 15-ந்திகதியன்று ஸ்பைற் ஹெட் எனுமிடத்திலே பிரித்தானிய முடிசூட்டுவிழாக் கடற்படைக் காட்சியின்போது காணப்படவிருக்கிறது. இதிலே பிரித்தானிய கடற்படையைச்சேர்ந்த 19 யுத்தக்கப்பல்களும், சாம்பிராச்சியநாடுகள், பிறநாடுகளைச்சேர்ந்த அநேகபோர்க்கப்பல்களும் சேர்ந்துகொள்ளும்.

—விஷ சர்ப்பம் தீண்டியவர்களைக் குணப்படுத்துவதற்கென்று நவமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஓர்மருந்தானது பம்பாய்மாகாணத்திலே இரண்டாயிரம்மனிதஉயிர்களைக் காத்துவைத்திருப்பதாகப் பம்பாய்ச் சுகாதாரமந்திரியார் தெரிவித்திருக்கின்றார். இந்த மருந்து பம்பாய்நகரிலுள்ள ஹாங்கினே ஸ்தாபனத்தில் 1945-ம்ஆண்டு பங்குனி 1-ந்திகதி கண்டுபிடிக்கப்பட்டு முந்தப்பஸ்பமாகப் பிரயோகிக்கப்பட்டபோது பெருங்குணஞ் செய்வதாயிற்று.

— பிரான்சும் ஐந்து வருடகாலம் விடாதுநடத்திய ஆராய்ச்சிவிளைவாகச் சப்தத்தைக்காட்டிலும் மிகவேகமாய்ப் பறந்துசெல்லக்கூடிய முதலாவதுஜெற் விமானத்தைக் கண்டுபிடித்துக் கட்டிப் பரீஸ்நகருக்குச் சமீபமாகச் சென்ற 24-ந் திகதியன்று முதன்முறையாகப் பறக்கவிட்டுப் பரிசோதனைநடத்தியிருக்கிறது. இதன்நாமம் "எஸ். ஓ. 9000 திறிடென்ற்" என்பது.

—ஆபிரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்குப் பறந்துசெல்லுகின்ற ஆகாயவிமானங்கள் வடதுருவத்தினூடாகக் கிரமமாகப்பறந்துசெல்வது முற்றுமே சாத்தியமானதென்று காலங்கண்ட வடதுருவஆகாயவிமானியாகிய கர்ணல் பேர்ண்ற் பால்சென் என்பவர் நியூயோக் நகரில் நிகழ்ந்த ஆகாயப்பிரயாண எழுத்தாளர் சங்கத்திலே தெரிவித்திருக்கின்றார்.

—பிரித்தானியிலிருந்து நியூசிலாந்துக்கு அடுத்தவருடம் ஓர் ஆகாயவிமானப்பந்தையம் நடந்தேறவிருக்கிறது. இதிலே பிரித்தானியில் நவமாகக் கண்டுபிடித்துச் செய்யப்பட்டுவரும் "வலியன்ற்" எனப்பெயரிய அணுவெடிகுண்டு விமானமும் கலந்துகொள்ளவிருக்கிறது. இது மணித்தியாலம் 500 மைல் வேகமாய்ப் பறந்துசெல்லக்கூடிய 'கன்பெறா' ஜெற்விமானத்திலும் கூடியவேகமுடையதாம்.

—எகிப்தின் பிரதமரான ஜெனறல் முகமதுநாகிப் நியமனஞ்செய்த உபகமிற்றிகூடி ஆலோசித்துவிட்டு, அங்கு முடியரசை நீக்கிவிடுமாறு சிபாரிசுசெய்ய ஏகமனதாய்த் தீர்மானித்திருக்கிறது. பாராளுமன்ற அரசாங்கத்துடன்கூடிய குடியரசுமுறையே எகிப்துக்குச் சாலச்சிறந்த ஆட்சியென்று தான் நம்புவதாகவும் அது தெரிவித்திருக்கின்றது.

—ஆயுர்வேத வைத்தியமுறையிலும் பட்டம் வழங்குதற்கான கலைப்பயிற்சி புதிதாகப் பம்பாய் மாகாணத்திலே தொடக்கப்பட்டிருக்கிறது. இப்பயிற்சியிலே பட்டங்கள்பெறுவோரை அரசினர் ஆஸ்பத்திரிகளில் வைத்தியஅதிகாரிகளாக, அன்றேல் சத்திரவைத்தியர்களாக நியமனஞ்செய்வதுபற்றி அரசாங்கம் பிந்தஆலோசிக்கவிருக்கிறது.

## "எனக்கு மகள் இல்லை"

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இவைகள்இரண்டும் சுத்தப்பொய்கள் என அவளுக்குப் போதிக்கப்பட்டது.

அமெரிக்கதனவந்தர்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்புமுடிந்ததும் அவர்களை ஐரோப்பாவுக்கு அனுப்புவார்கள். பிரயாணம் அறிவைவளர்க்கும். பல நாடுகளைப்பார்த்துப் பலருடன்புழங்குவதால் பலகாரியங்களையும் அறியலாம். அவர்களும் ஐரோப்பாவின் பலநாடுகளை ஒருவருஷத்துக்குச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்புவார்கள்.

எல்லாவும் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டாள். ஒருநல்லமனிதர் குடும்பசகிதமாய் அங்குபோனார். அவருடன் எல்லாவையும் அவள் தகப்பன் அனுப்பிவைத்தார். இந்தப்பிரயாணத்தினால் பெருத்தநன்மை விளையுமென அவர் எதிர்பார்த்தார். ஐரோப்பிய அரசர்களில்ஒருவர் தன்மகளை மணஞ்செய்ய விரும்பலாம்; அவளுக்கு என்னகுறை; அழகுஉண்டு, அந்தஸ்து இருக்கிறது, செல்வத்துக்குக் குறைவில்லை.

எல்லா புறப்பட்டு ஏறக்குறைய ஓராண்டாயிற்று. அவளும், அவள் நண்பர்களும் கடைசியாக நித்தியநகரமாகிய ரோமைக்குச்சென்றனர். அங்கிருந்து புறப்படவிருந்த சமயத்தில் அந்தக்குடும்பத்தினர் தங்கள் மறுபிரயாணத்தைப் பின்போடத் தீர்மானித்தனர். கர்த்தர் உயிர்த்த திருநாளுக்குப்பின் புறப்படத் திட்டஞ்செய்தனர். எல்லாவும் அவர்களுடன்தங்கச் சம்மதித்தாள்.

கோடீஸ்வரனுக்கு ஒருகடிதம் வந்தது. அது எல்லாவின்கடிதம். ஆவலுடன் அதைத்திறந்தார். வாசித்தார். அந்தோ! தலைசுழன்றது. ஆனால், விஷயம் தெளிவாக எழுதப்பட்டிருந்தது. தனதுஅண்ணரைப்பின்பற்றி அவளும் கத்தோலிக்க சபையிற் சேர்ந்துவிட்டாள். சிலதினங்களுக்கு முன்தான் ஞானஸ்நானம் பெற்றாள். அண்ணன் ஞானஸ்நானம்பெற்றதால் நேர்ந்ததை அவள் நன்குஅறிவாள். தனக்குவரக்கூடிய தண்டனையைப்பற்றியும் அவள் நன்குஅறிவாள். தான்செய்திருக்கும் காரியம் தகப்பனுக்கு எவ்வளவோதுயரைக் கொடுக்குமென்றும் தான்அறிவதாகவும் அவள் எழுதியிருந்தாள். "இப்படிக்கு, உங்கள்நேசக்குழந்தை, எல்லா" எனக் கடிதம் முடிக்கப்பட்டிருந்தது.

உடனே அவர் பதில்எழுதினார்: "நீயே உன்விதியைத் தெரிந்துகொண்டாய். விளைவுஎன்னவென்பது உனக்குத்தெரியும். இனிமேலாக நாங்கள் இருவரும் அந்நியரே. எனக்கு மகள் இல்லை. இனிஎனக்குக் கடிதம்எழுதவேண்டாம். என்னைப்பார்க்கவும் முயற்சிக்கவேண்டாம். நீவந்தால் வீட்டில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாய். வேலைக்காரருக்குக் கண்டிப்பான உத்தரவு கொடுத்திருக்கிறேன்."

கடிதத்தைஅனுப்பிவிட்டு நாற்காலியிற்சாய்ந்தார். தன்னை அறியாமலே பெருமூச்சுவிட்டார். என்றுமில்லாத சலிப்பும், மனஉடைவும் அவரை ஆட்கொண்டன. மனதில் பெரும்போராட்டம். அவர்செருக்கே வெற்றிபெற்றது. பிள்ளைப் பாசத்துக்கு இணங்கமறுத்தார். எனினும்அன்றுமுதல் ஏகாந்தம் என்னும்நோய் அவரை உபாதிக்கத் தொடங்கியது. மனச்சாட்சியும் குத்திக்கொண்டேயிருந்தது. வீட்டைவிட்டு வெளியேற்றப் பட்டவர்களை நினைத்துஏங்கினார். ஆயினும்ஆங்காரம் நிறைந்தஅவர்உள்ளம் விட்டுக்கொடுக்க மறுத்தது.

நிற்க, ஒருநாள்மாலை அவர்தனிமையாக உட்கார்ந்திருந்தார். கதவு திறந்திருந்தது. ஓர்ஆள் உள்ளேநுழைந்தார் — வளர்ந்தவர். குருத்துவ உடை அணிந்திருந்தார். அந்திவேளையாய் இருந்தபோதிலும் அவர்யாரென அந்தப்பணக்காரர் கண்டுபிடித்தார். அவர் உடலின் ஒவ்வொருஉறுப்பும் நடுங்கியது. எழுந்திருந்தார். பேசமுயன்றார். ஆனால், நா மறுத்தது. விரித்தகரங்களுடன் அந்தமனிதர் அணுகினார். இனிக் கேட்கவே மாட்டேனென்று அவர் நினைத்திருந்தகுரல் கேட்டது. "அப்பா!" என்றுமாத்திரம் அவர் சொன்னார். அவரின்உள்ளத்தில் ஏதோ கிளர்ச்சி ஏற்பட்டது. நாவின்கட்டு அவிழ்க்கப் பட்டதுபோலும். "மகனே!" என்றார். பிறகு அப்படியே முழந்தாளிட்டு அழ ஆரம்பித்தார்: "என்தேவனே, நீரே வெற்றிபெற்றீர். என்னை மன்னியும். நான் விசுவசிக்கிறேன். என்விசுவாசத்தைத் திடப்படுத்தும்." முழந்தாளிட்டிருந்தவரைக் குருவானவர் தூக்கிவிட்டார். கடவுளின் அளவற்றநேசத்தையும், இரக்கத்தையும்பற்றி எடுத்துக்கூறி அவரைத் தேற்றினார். தந்தையும் தனதுகடந்தகால வாழ்க்கையையிட்டு மிகவருந்தித் தன்குருமகனிடமே பாவசங்கீர்த்தனம் செய்தார்.

அன்றிரவு நெடுநேரம் தகப்பனும், மகனும் பேசிக்கொண்டிருந்தனர். "அப்பா, எங்கள்இருவரையும், எல்லா பார்த்தால் எவ்வளவோ ஆனந்தமடைவாள். அவள் திருஇருதய கன்னிகாசபையிற் சேர்ந்திருக்கிறாள். அடுத்தவாரம்அவள் கன்னியர்உடைதரிப்பாள். அன்று நாங்கள் இருவரும் அங்கிருந்தால், அவளதுசந்தோஷம் பூர்த்தியாகும்."


நமது அச்சியந்திரசாலைப் புத்தகசாலையில்

விற்பனைக்கிருக்கும்

இந்திய

கத்தோலிக்க புத்தகங்கள்

| | |
|---|---|
| சத்தியவேத சித்திரவிளக்கம் ... | 5-50 |
| திருஇருதய வணக்கமாதம் ... | 2-25 |
| அன்பின் அரசர் ... | 2-25 |
| சூசையப்பர் வணக்கமாதம் ... | 2-00 |
| பங்கிராஸ் ... | 3-50 |
| அர்ச். அருளானந்தர் ... | 1-50 |
| ஞானோபதேசக் கோர்வை முதற் பாகம், இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம் ... | 9-75 |
| சத்தியவேதாகம சங்ஷேபம் (பழைய ஏற்பாடு & புதிய ஏற்பாடு) ... | 1-10 |
| பிரதான மந்திரங்களின் வியாக்கியானம் ... | 2-25 |
| கத்தோலிக்கு களஞ்சியம் ... | |
| மன்ரேசா ... | 3-00 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் ... | 1-10 |
| தொன் பொஸ்கோ சரித்திரம் ... | 75 |
| அர்ச்சியசிஷ்டவாரம் ... | |
| சேசு திருச்சரிதை ... | 1-10 |
| சேசுவின்சிறிய புஷ்பம் ... | 1-10 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் ... | 1-10 |
| ஞான சீவியம் ... | 3-00 |
| கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தா ... | 1-00 |
| அன்னையும் தந்தையும் ... | |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவிநவநாள் ... | 35 |
| திரு இருதய நண்பர்களுக்குத் திருமணி ... | 40 |
| ஜெபமாலை நவநாள் ... | |
| புதுமைவள்ளல் புனித அந்தோனியார் ... | 45 |
| குருக்களுக்காக ஜெபிப்பதேன் ... | 25 |
| அர்ச். சூசையப்பரிடம் போங்கள் ... | 30 |
| அர்ச். சூசையப்பர் ... | 55 |
| ஆயரின் குரலொலி ... | |
| புதிய ஏற்பாடு (பெரிது) ... | 8-50 |
| புதிய ஏற்பாடு (சிறிது) ... | 3-75 |
| இரத்தம்வடிந்த லீலி ... | 75 |
| ஞானோபதேச பாடத்திட்டம் ... | 90 |
| திருக்குடும்ப பக்திமாலை ... | 3-25 |

விலாசம்:

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

# அமெரிக்க ஜனாதிபதிகள்

"இங்கேபார்! தம்பி, நீங்கள் ஒருநாள் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வரக்கூடும்; ஆனபடியினாலே சீலமாக வாழவேண்டும்" என்று பெற்றோர் தங்கள்பிள்ளைகளை ஊக்கமாக வளர்க்கின்றனர். அமெரிக்க ஜனாதிபதிபதவி தேசத்திலே ஆகஉயர்ந்த பதவிதான். ஆயினும் அதைஅடைய அமெரிக்கமக்களுக்குச் சரிசமானமான சந்தர்ப்பம் இருக்கிறது. பெற்றோர் தங்கள்குழந்தைகளிடம் மேற்கண்டவாறு சொல்லும்போது, சாதாரணமாகவே சொல்லியிருக்கலாம். என்றாலும், இந்தக்கனவு நனவாகும்என்ற நம்பிக்கை இல்லாத பெற்றோர்அரிது.

இதற்குமுந்திய 33 ஜனாதிபதிகளின் வரலாற்றைப்பார்த்தால் பணத்துக்கும், பெரியஇடத்துக்கும், ஜனாதிபதிபதவிக்கும் சம்பந்தம் அப்படி அலாதியாக இல்லைஎன்பதுபுலனாகும். மக்கள்ஒருவரை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கையில்; ஒருவருடைய செயற்திறனையும், பாக்கிரமத்தையும் பார்த்துப் பொறுக்கி எடுக்கிறார்களேதவிர, இன்னாருடைய வம்சத்தில் இவர்வந்தவர், இவ்வளவு சொத்துக்காரர் என்று சிந்திப்பதுகூட இல்லை.

1929-ம் ஆண்டு முதல் 1933-ம் ஆண்டுவரையில் ஜனாதிபதியாக இருந்தவரும், இப்போதுசீவந்தராக இருப்பவருமான ஹெர்பேட் ஹூவர்அவர்கள் அயோவாநாட்டில் ஒருகொல்லருடைய குமாரர். ஒன்பதுவயதில் அனாதையானஇவர் தனதுமாமன் வீட்டில் வளர்ந்தார். பகலில்வேலைசெய்து சம்பாதித்து, இரவுநேரங்களில் படித்துவந்தார். பல்கலைக்கழகத்திலும் இவ்வாறே இவர்பயின்றார்.

ஹரி எஸ். ட்றுமன்அவர்கள் சீவந்தராகஇருக்கும் மற்றோர் முன்னைநாள் ஜனாதிபதி. 1945-ம் ஆண்டு முதல் 1953-ம்ஆண்டு தை20-ந்தேதிவரையில் ஜனாதிபதிபதவி வகித்தவர். இளைஞராய்இருக்கும்போது றெயில்வே த் தொழிலாளராக வேலைசெய்தார். பலசரக்குக்கடை, வங்கி ஆதியவற்றிலும் இவர் வேலைபார்த்திருக்கிறார். முதலாவது மகாயுத்தத்திற்குப்பிறகு புடவைக்கடை வைத்திருந்தார். கமஞ்செய்தார். சட்டம்படித்தார். செனற்றரானார்.

ஜனாதிபதி ஐஸன்ஹாவரும் மத்தியதர குடும்பத்தில் பிறந்தவரே. இவர் தகப்பனார் பாற்பண்ணைத் தொழிற்சாலை ஒன்றில் வேலைபார்த்தார். ஐஸன்ஹாவரின் சகோதரர்கள்யாவரும் உழைத்துச்சம்பாதித்துப் படிப்புக்குப் பணம் தேடிக்கொண்டவர்கள். உழைப்பினால் உயர்ந்த குடும்பத்துக்கு இந்தக்குடும்பம் தக்கசான்று.

மற்றோர் ஜனாதிபதியான கல்வின் கூலிட்ஜ் (1923–1929) அவர்கள் எளியகுடும்பத்தில் பிறந்தவர். மற்றொருவரான அன்ட்று ஜாக்ஸன் (1829–37) அவர்களின் சகோதரர்கள் அமெரிக்க சுதந்திரப்போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள். இவர் 17-வது வயதில் தாய்தந்தையரை இழந்தார். தானாகஉழைத்து முன்னுக்குவந்தார்.

பழைய ஜனாதிபதிகளில் நால்வர்: மில்லார்ட் பில்மோர், ஜேம்ஸ் புக்கானன், ஆபிரகாம் லிங்கன், ஜேம்ஸ் ஏ. கார்பீல்ட்என்பவர்கள் ஒரே அறையுள்ள குடிசையில் பிறந்தவர்கள். சற்றே பெரிய குடிசையில்பிறந்தவர் ஐந்தாவது ஜனாதிபதி செஸ்ற்றர் ஏ. ஆர்தர்அவர்கள்.

ஆன்ட்று ஜான்ஸன் (1865–69)ஒரு "போட்ட"ருடையமகன். 10-வது வயதில் தையற்காரர்ஒருவரிடம் வேலை பழகினார். ஜேம்ஸ் ஏ. கார்பீல்ட்அவர்கள் (1884-ம்ஆண்டிலே சிலமாதங்கள் மட்டும் ஜனாதிபதியாக இருந்தவர்) வாய்க்கால்வெட்டும் தொழிலாளி ஒருவரின் புதல்வர். விதவையான இவர் தாயாரும், வயதானசகோதரரும் இவரின்படிப்புக்காகத் தியாகங்கள்பல செய்தார்கள்.

குரோவர்கிளிவ்லண்ட்அவர்கள் (ஒரு தடவைவிட்டு இரண்டுதடவை ஜனாதிபதிபதவிவகித்த ஒரேயொருவர்) ஒரு பாதிரியாரின் மகன். 16-ம் வயதில் அனாதையாகித், தானாக முன்னுக்கு வந்தவர். குருடர்பாடசாலையில் ஆசிரியராக இருந்தார். சட்டம் படித்தார். ஜனாதிபதியானார்.

வாறன் ஜி. ஹார்டிங் (1921–23) ஒருநாட்டுப்புற வைத்தியரின்மைந்தன். சிறுவயதிலே அச்சகத்தில் வேலைபழகினார். பத்திரிகைநடத்தினார். முதலில் அந்தப்பத்திரிகையில் வேலைபார்த்தார்.

இவ்வளவுவரலாறும், எளியவர்கள் எளியவர்களாகவே இருந்துவிடுவதில்லை என்பதையும், சுயமாகஉழைத்து அரசாங்கநிர்வாகத்திலும், தொழிற்துறையிலும் உயர்பதவிக்குவர ஐக்கிய அமெரிக்கதேசத்தில் யாருக்கும் சமமானசந்தர்ப்பம் இருக்கிறதுஎன்பதையும்காட்டுகின்றன.

# பொதுவர்த்தமானம்

## ருஷிய வெளிநாட்டுமந்திரி

ருஷியாவிலே ஜோர்ஜி மலென்கொவைப் பிரதமராகக்கொண்ட புதிய சோவியற்ஆட்சிப்பீடம் செய்துள்ள முதல்மாற்றங்களில் ஒன்று, அதன் வெளிநாட்டு மந்திரியாயிருந்த எம். விஷின்ஸ்கி என்பவரை அதிகாரபதவியிலிருந்து கீழேயிறக்கி அவரிடமாக எம். மொலொற்றவ் என்பவரை வெளிநாட்டுமந்திரியாக நியமித்துவிட்டமையே. தற்போது எம். விஷின்ஸ்கி ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்திலே ருஷியாவின் நிரந்தரபிரதிநிதியாக நியமனஞ் செய்யப் பட்டிருக்கின்றார். கடந்த காலத்திலே இவர் ஆற்றியுள்ள சிறந்த சேவைகளுக்கெல்லாம் கொடுபட்டுள்ள சன்மானம், ஆட்சிப்பீடத்திலிருந்து இவரை மெதுவாக வெளியேற்றிவிட்டிருப்பதேயாம். அதனால்இவர் ஸ்ராலின் மரணமடைந்ததும் நியூயோக் துறைமுகத்திலிருந்து மஸ்கோவுக்குக் கப்பலேறுகையில் தனது நண்பர்களுக்குக் கூறிய பிரியாவிடையின்போது, இவரது கன்னங்கள் இரண்டாலும் கண்ணீர் வழிந்தோடக்காரணம், ஸ்ராலின் மாண்டுபோயினார் என்பதையிட்டா? அன்றேல் அதிகார பதவியிலிருந்து தான் கீழே இறக்கப்பட்டதையிட்டா? என்றுகண்டறிய முடியாதிருக்கிறதாம்.

## கூடியதொகையான பெண்கள்

உலகின் அதிகமான பகுதிகளிலே ஆடவர்களைக்காட்டிலும் பெண்களின் தொகையே அதிகதீவிரமாக அதிகரித்துக்கொண்டிருப்பதாக நியூயோக்நகரிலைவ் இன்சூறன்ஸ்கம்பெனி கண்டறிந்திருக்கிறது. ஏறக்குறைய ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும், விசேஷமாக இரும்புத்திரை நாடுகளிலும் ஆடவர்களிலும்பார்க்கப் பெண்கள் அதிகமாகவிருக்கின்றார்கள். உதாரணமாக, கிழக்குஜேர்மனியிலே ஒவ்வோர் ஆயிரம்பெண்களுக்கும் 743 ஆடவர்கள் வீதம் இருந்துவருகின்றார்கள். இந்த வீதம் ஐரோப்பாவில் மாத்திரமல்ல, உலகமுழுவதிலும் அதிகங்கூடியதாகும். அடுத்தபடியாகப் பெண்கள் அதிகமாகவுள்ள கம்யூனிஸ்தநாடு பல்கேரியாவே. சோவியற்ருஷியாவிலே 1939-ம்ஆண்டில் ஒவ்வோர் ஆயிரம் பெண்களுக்குப் 920 ஆடவர்கள்வீதம் இருந்தார்கள். ஆனால், யுத்தத்திலே ருஷியா பெருந்தொகையான போர்வீரர்களை இறக்கக்கொடுத்தமையால் இந்தவீதம் மேலும் அதிகரித்திருக்குமென்று சொல்லவேண்டியதில்லை. மேற்குஐரோப்பாவிலே மேற்கு ஜேர்மனியிலும், ஆஸ்திரியாவிலுந்தான் ஆடவர்களைக்காட்டிலும் அதிகமானபெண்கள் இருக்கின்றார்கள். தென்னாபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் நாடுகளில்தான் பெண்களைப்பார்க்கிலும் கூடியதொகையான ஆடவர்கள் இருந்துவருவதாகச் சொல்லப்படுகிறது.

# அந்தோனிக்குட்டி அண்ணாவியார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எழில்திறம்வாய்ந்தவை. ஒரு உதாரணம்.

தந்தையர் இறந்தார் பெற்றதாய் இறந்தாள்
சகோதரர் ஆயினோர் இறந்தார்
சகலரும் இறந்தார் நானுமிங் கிறக்கத்
தக்கநாள் நாளையோ இன்றோ?
எந்தநாள் அறியேன் ஆயினும் அடியேன்
இறக்குமநாள் ஒன்றுள தென்பால்
எனக்குநான் அழவோ அவர்க்குநான் அழவோ
என்செய்வேன் என்றனக் கிரங்காய்
கொந்துலாம் மலரின் வண்டுபாண் முரலக்
குரங்கினம் விரற்கையால் வருக்கைக்
குடக்கனி பிதிர்த்துக் குறுஞ்சுளை எடுத்துக்
குட்டிகள் அருந்திடக் கொடுக்கும்
அந்தமா நசரை வந்தகா ரணனே
அளவிலா தவனே பரம பூரணனே
ஆதியே யேசு நாயகனே!

இப்பாட்டின் முதற்பகுதி எல்லோரும்எளிதில் அறிந்துகொள்ளும்பாணியில் அமைந்திருக்கின்றது. பிற்பகுதி புலவர்க்கே விருந்தாகும் சொற்பொருள் விருந்தாகச் செறிந்திருக்கின்றது.

(தொடரும்)

## ஸ்ராலினைப்பற்றிய தலையங்கம்

காலஞ்சென்ற ஸ்ராலினைப்பற்றி "டைம்ஸ் அவ் இந்தியா" எனும் தினசரிஎழுதியுள்ள தலையங்கம் வருமாறு: "லெனின் காலமானபிறகு ஸ்ராலின் பதவிக்குவந்தபோதும், அதற்குப்பின்னர் பலதடவைகளிலும், ஸ்ராலின் மட்டும் மனதுவைத்திருந்தாரானால் எவ்வளவோ நல்லகாரியங்கள் செய்திருக்கலாம். ஆனால், அவர் கடைப்பிடித்தகொள்கைகள் அவரது இரத்தக்கறைபிடித்த ஆட்சியையே குறிக்கின்றன. லட்சக்கணக்கானவர்களின் உயிரைக் குரூரமாகஉறிஞ்சித் தனது பதவியை அவர்பலப்படுத்தினார். மனிததயைஎன்பது அவரிடம் இல்லவே இல்லை. அப்படிப்பட்டவரைக் கம்யூனிஸ்தர்கள்தான் தயாளசீலரென்று அழைக்கிறார்கள். அது பொருத்தமல்ல. ஸ்ராலின் சாமர்த்தியராக இருக்கலாம், பலசாலியாக இருக்கலாம், தைரியசாலியாக இருக்கலாம், ஒருமாதிரி விவேகமும் உடையவராக இருக்கலாம். என்ன இருந்தும் என்ன பயன்? அவரிடம் நன்மை, உண்மை என்ற ஒளிஇல்லை. நல்லெண்ணம் இல்லாமல் என்னபயன்? ஒரு பயனுமில்லை. சக்தியைத் துர்ப்பிரயோகம் செய்தவர் ஸ்ராலின்"

## சோவியற்அரசின் கடற்பலம்

உலகில் இரண்டாவது மிகப்பெரிய கடற்படையைக் கொண்டிருப்பது சோவியற் அரசேயென்று பிரித்தானிய கடற்படைச் சேனாபத்தியத்தின் முதலாவது தலைவரான திரு. ஜேம்ஸ் தோமஸ்அவர்கள் கூறுகின்றார். "அதிக பலம்பொருந்திய சுமார் இருபது குருயிசர்களையும், நூற்றுக்கு மேற்பட்ட டிஸ்திரோயர்களையும், சகலவகுப்புகளையுஞ்சேர்ந்த முன்னூற்றைம்பதுக்கு மேற்பட்ட சப்மறின்களையும் சோவியற்கடற்படை கொண்டிருக்கிறது; அதன் கடற்படைப் போர்க்கப்பல்கள் கட்டப்படும்திட்டத்தின் வேகாபெருக்கமானது சமீபகாலத்தில் மிகவும் பிரமிப்புக்குரியது; வடஅத்திலாந்திக் உடன்படிக்கையிற் சேர்ந்துள்ள பதினான்குநாடுகளுஞ்சேர்ந்து வருடம்ஒன்றுக்குக் கட்டுவதிலும்பார்க்கக் கூடியசோவியற்குருயிசர்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன; இன்னும்பலம்பொருந்திய கடற்படைக்குரிய ஆகாயப்பலத்தையும் ருஷியா கொண்டிருக்கிறது" என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Intestate Estate of the late Gabriel Solomon Puvirajasinghe of Russell's Square, Jaffna.

Deceased.

Testamentary Jurisdiction } No. 1549 T.

Michael Jacob Justin Puvitajasinghe of Russell's Square, Jaffna.

Petitioner.

Vs.

Joseph Leopold Cyril Puvirajasinghe of do.

Respondent.

This matter coming on for determination before K. D. de Silva, Esquire, District Judge, Jaffna, on the 18th day of November 1952 in the presence of Mr. J. Patrick, Proctor, on the part of the Petitioner and the affidavit and petition of the Petitioner having been read:—

It is ordered that Letters of Administration to the estate of the said deceased be granted to the Petitioner as one of the sons and heir of the deceased abovenamed unless the Respondent shall appear before this Court on or before the 16th day of January 1953 and show cause to the satisfaction of this Court to the contrary.

The 18th day of November, 1952.

Sgd. K. D. de SILVA,
District Judge.

16-1-53
Order Nisi extended for 23-2-53.
Sgd. K. D. de Silva,
D. J.

23-3-53
Order Nisi extended for 23-3-53.
Sgd. Spencer Rajaratnam,
D. J.

23-3-53
Time to show cause extended for 11-5-53.
Sgd. Spencer Rajaratnam,
D. J.

Drawn by:
Sgd. J. Patrick,
Proctor for Petitioner.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான் எனது பரீட்சையில் திருமுகத்தின் அருளாலும், பாத்திமா அன்னை, அர்ச். அந்தோனியார், அர்ச். தெரேசம்மாள், அர்ச். சவேரியார், அர்ச். றீத்தம்மாள், அர்ச். எக்ஸ்பீற் முதலானோரின் வேண்டுதலாலும் நல்லசித்தி அடைந்தேன். நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கிறேன்.

P. Mary Theresa Peries
Kochchikade

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திரு இருதயநாதரின் கிருபையாலும், சதாசகாயமாதாவின் மன்றாட்டாலும் எனக்கிருந்த தலைவலி, வயிற்றுக்கோளாறு முதலியன பருதிமுன் பனிபோல மறைந்துவிட்டன. அவர்கள் நாமம் வாழ்த்தப்படுவதாக.

மிருசுவில் ஞா. தா. ஜெயராணி

— ஒருமுறைக்கு இருமுறை தமது சிம்மாசனத்தைத்துறந்து தேசாந்திரியாகிப் போர்த்துக்காலிலே லிஸ்பன்நகருக்குச்சமீபமாக வசித்திருந்தவரான ருமேனியதேச மாஜி கறோல்மன்னர் சென்ற 4-ந் திகதி சனிக்கிழமை திடீரெனக் காலஞ்சென்றாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. இறக்கும்போது இவருக்குவயது 59.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 9-1953